லழஊனமுற்ற நபர்களின் உரிமைக்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம்

அறிமுகம்:
ஊனமுற்றோர் உரிமைக்கான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்தின் முழு விவரங்கள் எளிமைப் படுத்தப்பட்டு இங்கு விளக்கப்பட்டுள்ளது. இவ்வொப்பந்தத்தின் முழு நகலைப் பெற http://www.un.org/esa/socdev/enable/rights/convtexte.htm இது 2004- ம் ஆண்டு நியுசிலாந்து அரசாங்கம் தயாரித்து, பணிக்குழுவினால் பரிசிலிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்தின் சுருக்கம்.

முன்னுரை:

1. நாம் அனைவரும், உலக அமைதி, சுதந்திரம் மற்றும் நியாயம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அடிப்படையாக கொண்ட சமத்துவமான மனித குடும்பத்தின் உறுப்பினர்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை ஆவணங்கள் கூறுகின்றன.
2. நாம் அனைவரும் சமம் மற்றும் நம் அனைவருக்கும் மனித உரிமைகள் உண்டு.
3. ஊனமுற்ற நபர்கள் அனைவரும் அனைத்து மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரத்தையும் அனுபவிக்க வேண்டும் மற்றும் அவர்களுக்கு எதிராக எந்த பாரபட்சமும் இருக்கக் கூடாது என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
4. மனித உரிமைகளை மேம்படுத்த மற்றும் பாதுகாக்க மேலும் 7 விதமான சர்வதேச ஒப்பந்தங்கள் உள்ளன.
5. சுற்றுப்புற சூழல் மற்றும் மக்களுடைய எண்ணங்களும் தான் ஊணத்தை உருவாக்குகிறது என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும்.
6. ஊனமுற்றோரின் முன்னேற்றத்திற்காக உலக அளவில் உள்ள பொதுவான விதிகள் மற்றும் செயல்பாடுகளால் அவற்றை அடைவதற்கு உருவாக்கப்படும் சட்டங்கள், விதிகள், திட்டங்கள், முடிவுகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றை நாம் கருத்தில் கொள்வது மிகவும் அவசியம்.
7. ஒவ்வொரு அரசாங்கமும் சர்வதேச நிறுவனங்களும் தேசிய வளர்ச்சிக்கான திட்டங்களை மேற்கொள்ளும் பொழுது ஊனமுற்ற நபர்களின் நிலைமையையும் சம அளவில் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை உறுதி செய்வது மிகவும் அவசியம். உதாரணமாக: வறுமை ஒழிப்பு மற்றும் வேலை வாய்ப்பு.
8. எவரொருவர் ஊனமுற்ற நபரை பாரபட்சமாக நடத்துகிறாரோ, அப்பொழுது அவர் அவர்களுடைய மனித மாண்பையே மறுக்கிறார் என்று உணர வேண்டும்.
9. மேலும் ஊனமுற்ற நபர்களிடையே பல வித்தியாசங்கள் இருக்கின்றது மற்றும் பல விதமான ஊனங்கள் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.
10. ஊனமுற்ற நபர்கள் அனைவரும் சிறப்பு தேவைகள் உட்பட அனைத்து உரிமைகளையும் பெற வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

11. ஊனமுற்ற நபரின் உரிமைகளை பாதுகாக்கும் ஒப்பந்தங்கள் பல இருந்தாலும், அவை இப்பொழுதும் அவர்களுக்கு மறுக்கப் படுகின்றது என்பது வருத்தத்திற்குரியது.
12. ஊனமுற்ற நபரின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் நாடுகள், குறிப்பாக பின்தங்கிய நாடுகள் ஒன்றுக்கொன்று இணைந்து செயல்படுவது அவசியம் என்பதை நாம் உணர வேண்டும்..
13. ஊனமுற்ற நபர்கள் அனைத்து செயல்பாடுகளிலும் ஈடுபடுத்தப்படுவதன் மூலமும் அவர்களுடைய உரிமைகளை அனுபவிக்கும் பட்சத்திலும் தங்களுடைய நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவ முடியும் என்பதை நாம் உணர வேண்டும்.
14. ஊனமுற்ற நபர்கள் தங்களுக்காக தாமே முடிவெடுக்க கூடிய சுதந்திரத்தை பெற்றிருப்பது மிகவும் முக்கியம் என்பதை நாம் உணர வேண்டும்.
15. கொள்கைகள் மற்றும் திட்டங்களை, (குறிப்பாக அவர்களுக்கு நேரடியாக தொடர்புடைய விஷயங்களில்) உருவாக்கும் பொழுது ஊனமுற்றோர்களையும் அதில் கண்டிப்பாக ஈடுபடுத்த வேண்டும்.
16. ஊனமுற்ற நபர்கள் அவர்களுடைய ஊனத்தின் காரணமாக மட்டுமல்லாமல் அவர்களுடைய இனம், பால், போன்ற பல காரணங்களின் அடிப்படையிலும் பாரபட்சமாக நடத்தப்படுவது வருத்தத்திற்குரியது.
17. அநேக சந்தர்ப்பங்களில் ஊனமுற்ற பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பல்வேறு வன்முறைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை உணர்கிறோம்.
18. எல்லா குழந்தைகளைப் போலவும் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு. அதேபோல குழந்தைகள் உரிமைக்கான சர்வதேச ஒப்பந்தமானது ஊனமுற்ற குழந்தைகளுக்கும் பொருந்தும் என்பதை நாம் உணர வேண்டும்.
19. ஒவ்வொரு நாடும் ஊனமுற்ற நபர்களின் மனித உரிமைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது அதில் ஆண்கள், பெண்கள் ஆகிய இருபாலரின் நிலைமைகளையும் கருத்தில் கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.
20. பெரும்பாலான ஊனமுற்ற நபர்கள் ஏழ்மை நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் மற்றும் தாக்கங்களையும் நாம் கண்டறிய வேண்டும்.
21. ஊனமுற்ற நபர்கள் தங்களுடைய உரிமைகளை அடைவதற்கு தேவையான அமைதி மற்றும் பாதுகாப்பான சூழ்நிலையை, (குறிப்பாக சண்டை நடைபெறும் பகுதிகள் அல்லது தங்களுடைய அரசாங்கம் செயல்படாத நாடுகளில் வாழ்பவர்கள்) உறுதி செய்ய வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.
22. ஊனமுற்ற நபர்கள் தங்களுடைய உரிமைகளை பயன்படுத்தும் வகையில் தங்களுடைய வாழ்க்கையில் அனைத்து விஷயங்களையும் அனுபவிக்க வேண்டும் என்பது மிகவும் அவசியம். (நல்ல சுகாதாரம், கல்வி, தேவையான தகவல்கள்)
23. ஒவ்வொரு தனிநபரும் தன்னுடைய உரிமைகளை அனுபவிப்பதை உறுதி செய்வது நம் அனைவரின் கடமையாகும்.
24. சமூகத்தில் குடும்பம் என்பது ஒரு முக்கிய அங்கம் என்பதை உணர்ந்து ஊனமுற்ற நபர்கள் மற்றும் அவரது குடும்பத்தினரும் தங்களுடைய மனித

உரிமைகளை பெறுவதற்கு தேவையான பாதுகாப்பு மற்றும் உதவிகளை நாம் வழங்க வேண்டும்.

25. வாழ்க்கையில் பல சூழ்நிலைகளிலும் உள்ள விஷயங்களை நாம் புரிந்து கொண்டு செயல்படுவது ஊனமுற்ற நபர்களின் வாழ்க்கை மேம்பட உதவியாக இருக்கும். மேலும் பணக்கார நாடுகள் மற்றும் ஏழை நாடுகளில் ஊனமுற்ற நபர்கள் சமமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வாழ்க்கையில் அனைத்து செயல்பாடுகளிலும் சம அளவில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும்.

மேலே பட்டியலிடப்பட்டுள்ள கருத்துக்கள் அடிப்படையில் சம்மந்தப்பட்ட நாடுகள் பின்வரும் விஷயங்களை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளன.

பிரிவு : 1
நோக்கம்:
இவ்வொப்பந்தத்தை ஏற்றுக் கொண்டுள்ள நாடுகள் பின்வரும் விஷயங்களை உறுதி செய்யும் என்ற அடிப்படையில் தான் இவ்வாவணமானது உருவாக்கப்பட்டுள்ளது.

- ஊனமுற்ற நபர்களின் அனைத்து மனித உரிமைகளும் சுதந்திரமும் மேம்படுத்தப்பட வேண்டும். பாதுகாக்கப் பட வேண்டும். மற்றும் அவர்களால் அனுபவிக்கப் பட வேண்டும்.
- ஊனமுற்ற நபர்களின் மனித மாண்பு மதிக்கப்பட வேண்டும்.

ஊனமுற்ற நபர்கள் என்பவர்கள் நிரந்தரமான அல்லது நீண்ட கால அளவிற்கு குறைபாடு உடையவர்கள். உதாரணமாக உடல் ரீதியான, மன ரீதியான, சமூக ரீதியான, அறிவு ரீதியான குறைபாடுகள் மற்றும் மக்களின் கண்ணோட்டம், கலாச்சாரம், இயற்கை தடைகள் மற்றும் சட்டங்கள் போன்ற காரணங்களினால் சமூதாயத்தில் இணைந்து செயல்பட தடையாக உள்ள காரணத்தின் அடிப்படையில் உள்ளவர்கள்.

பிரிவு : 2
வரையறைகள்

தகவல் தொடர்பு – அனைத்து மக்களும் தொடர்பு கொள்ளக் கூடிய எல்லா விதமான தகவல் தொடர்பு வழிகள். உதாரணமாக வாய் மொழி, சைகை மொழி, புள்ளி எழுத்து(பிரெயில்), பொதுவான எழுத்து முறை, தொடு முறை எழுத்து, பெரிய அளவில் அச்சடிக்கப்பட்ட எழுத்து, ஒலி நாடா போன்ற ஊனமுற்ற நபர்களால் பிறருடன் தொடர்பு கொள்ள பயன்படும் அனைத்து முறைகளும்.

மொழி – மொழி என்பது வாய்மொழி, சைகை மொழி, மற்றும் பேச்சைத் தவிர பிற வகையில் தொடர்பு கொள்ளப் பயன்படுத்தப்படும் மொழிகள்.

ஊனத்தின் அடிப்படையில் பாரபட்சம் காட்டுதல் - ஊனத்தின் காரணமாக ஒருவரை ஒரு செயலை செய்வதிலிருந்து ஒதுக்கி வைத்தல், மறுத்தல் மற்றும் தடுத்தல். இது வாழ்க்கையில் எந்த சூழ்நிலையிலும் நடைபெறக் கூடும்.

கூடுமான வரையில் தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்துதல் - ஒருவரின் தேவைக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுத்தல். உதாரணமாக ஒருவர் தன்னுடைய உரிமைகளை அனுபவிக்கும் வகையில் வீட்டிலும் வேலை செய்யும் இடங்களிலும் தக்க மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுத்தல். ஆனால் இம்மாற்றத்தை மேற்கொள்ள அதிக செலவோ, தடைகளோ இருக்கும் பட்சத்தில் அம்மாற்றத்தை மேற்கொள்ள இயலாது.

பொதுவான வடிவமைப்பு – அனைத்து மக்களும் பயன்படுத்தும் வகையில் பொருட்களை வடிவமைத்தல் திட்டங்களை உருவாக்குதல், கட்டிடங்களை கட்டுதல். சில நேரங்களில் சில குறிப்பிட்ட ஊனத்தால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற நபர்கள் தங்களுடைய உரிமைகளை அனுபவிப்பதற்கு சில சிறப்பான வசதிகள் தேவைப்படும்.

பிரிவு: 3
பொதுவான கொள்கைகள்

இந்த ஒப்பந்தத்தின்படி:

- மனித மாண்பு
- தேர்ந்தொடுக்கும் திறமை
- சுதந்திரமாக செயல்படுதல்
- பாகுபாடின்மை
- பங்கேற்பு
- முழு ஈடுபாடு
- வேற்றுமையை மதித்தல்
- ஊனத்தை அன்றாட வாழ்க்கையின் ஒரு அங்கமாக ஏற்றுக் கொள்ளுதல்
- சம வாய்ப்பு
- தடையற்ற சூழ்நிலை
- ஆணும் பெண்ணும் சமம்.
- குழந்தைகளை மதித்தல்.

பிரிவு 4
பொதுவான கடமைகள்

1. மனித உரிமை என்பது அனைத்து மக்களுக்கும் பொதுவானதே. அதை ஊனத்தை காரணம் காட்டி மறுக்க கூடாது என்று அனைத்து நாடுகளும் உறுதி கொள்ள வேண்டும். உறுதிக் கொள்ளும் பட்சத்தில் அவை:

அ. தங்கள் நாட்டில் உருவாக்கப்படும் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் அவற்றை இவ்வொப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி செயல்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

ஆ. தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்: ஊதாரணமாக புதிய சட்டங்களை இயற்றுதல், தேவைப்படும் பட்சத்தில் பழைய சட்டங்களையும், விதிகளையும் மாற்றி அமைத்தல், ஊனமுற்ற நபர்களை பாகுபடுத்தும் செயல்களை கைவிடுதல் மற்றும் அம்மாதிரியான சட்டங்களை விளக்கிக் கொள்ளுதல்.

இ. அனைத்து கொள்கைகளும், திட்டங்களும் ஊனமுற்ற நபர்களின் மனித உரிமைகளை உள்ளடக்கிய வகையில் அமைவதை உறுதி செய்தல்.

ஈ. இவ்வொப்பந்தத்திற்கு எதிராக எந்த செயலையும் செய்யாதிருத்தல் மற்றும் அனைவரும் இவ்வொப்பந்தத்தை மதிக்கும் வகையில் செயல்படுதல்.

உ. ஊனத்தின் காரணமாக ஒருவருக்கு பாரபட்சம் காட்டும் தனி நபர்கள், அமைப்புகள் மற்றும் வியாபார நிறுவனங்கள் அவற்றை கைவிட தேவையான நடவடிக்கையை மேற் கொள்ளுதல்.

ஊ. உலகத்தில் உள்ள அனைத்து ஊனமுற்ற நபர்களும் தங்களுக்குத் தேவையான பொருட்கள், சேவைகள் மற்றும் உபகரணங்களை குறைந்த விலையில் பெறுவதற்காக செயல்படுதல் மற்றும் பிறரை செயல்பட ஊக்குவித்தல்.

எ. ஊனமுற்ற நபர்களின் வாழ்க்கைக்கு தேவைப்படும் அனைத்து வி ஷயங்களுக்கும் தேவையான தொழில் நுட்பத்தை குறைந்த செலவில் உருவாக்குதல் மற்றும் உருவாக்குவதை ஊக்குவித்தல்.

ஏ. ஊனமுற்ற நபர்கள் புரிந்து கொள்ளும் வகைகளில் தொழில்நுட்பம் மற்றும் பிற உதவிகள் பற்றிய தகவல்களை வழங்குதல்.

ஐ. ஊனமுற்ற நபர்களுடன் வேலை செய்யும் நபர்களுக்கு அவர்கள் மேலும் சிறப்பாக வேலை செய்வதற்கு இவ்வொப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் பற்றிய பயிற்சியை அளித்தல்.

2. பொருனாதார, சமூதாய மற்றும் கலாசார உரிமைகளை பொருத்தவரையில் சட்டங்களையும், விதிகளையும் அதற்கான வள ஆதாரங்களின் அடிப்படையில் எந்த அளவிற்கு செயல்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு நடைமுறை படுத்த வேண்டும். தேவைப்படும் பட்சத்தில் இவ்வுரிமைகளை செயல்படுத்துவதில் பிற நாடுகளின் ஒத்துழைப்பையும் நாடலாம். பிற உரிமைகள் அனைத்தையும் உடனடியாக செயல்படுத்த வேண்டும்.

3. இந்த ஒப்பந்தம் சம்பந்தபட்ட சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்கும் பொழுது நாடுகள் இது சம்பந்தமாக ஊனமுற்ற நபர்களுடன் (ஊனமுற்ற குழந்தைகளுடனும், அவர்களின் பிரதிநிதிகளாக செயல்படும் நிறுவனங்கள்) பேசி அவர்களையும் ஈடுபடுத்துதல் அவசியம்.

4. இவ்வொப்பந்தத்தின் காரணமாக ஊனமுற்ற நபர்களுக்காக ஏற்கனவே சிறப்பாக செயல்பட்டு வரும் சட்டங்கள் மற்றும் விதிகள் எந்த விதத்திலும் பாதிப்படையாது. ஆகவே, இவ்வொப்பந்தத்தை காரணம் காட்டி நாடுகள் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் மனித உரிமைகளை மறுக்கக் கூடாது.

5. இவ்வொப்பந்தமானது நாடு முழுமைக்கும் பொருந்தும்.

பிரிவு – 5

சமத்துவம் மற்றும் பாரபட்சமின்மை

1. ஊனமுற்ற நபர்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமம். மேலும் அவர்களுக்கு எந்த வித பாரபட்சமுமின்றி சட்ட பாதுகாப்பு உண்டு என்பதை அனைத்து நாடுகளும் ஒப்புக்கொள்கின்றன.
2. ஊனத்தின் காரணமாக எவரொருவரும் பாகுபடுத்தபடுவதை அனுமதிக்க முடியாது. மேலும் அவ்வாறு பாகுபடுத்தப்படும் சூழ்நிலையில் அவர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படும் என்பதை அனைத்து நாடுகளும் ஒத்துக் கொள்கின்றன.
3. ஊனமுற்ற நபர்கள் தங்களுடைய உரிமைகளை அனுபவிப்பதை உறுதி செய்யும் வகையில் சூழ்நிலையில் மாற்றம் தேவை என்ற பட்சத்தில் அத்தகைய மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்க நாடுகள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
4. ஊனமுற்ற நபர்கள் பிறருடன் சமமாக இருப்பதற்கு தேவைப்படும் சிறப்பான நடவடிக்கைகள் அல்லது தேவைப்படும் வசதிகள் அனுமதிக்கப் பட வேண்டும். ஆனால் இச்செயல் ஊனமற்ற பிறரை பாகுபடுத்தும் விஷயமாக கருதக் கூடாது.

பிரிவு – 6
ஊனமுற்ற பெண்கள்

1. ஊனமுற்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் எல்லாவிதமான பாகுபாடுகளையும் சந்திக்கின்றனர். ஒவ்வொரு நாடும் குழந்தைகள் மற்றும் பெண்கள் அனைத்து மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை முழுமையாகவும் பிறருக்கு இணையாகவும் பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.
2. பெண்கள் வளர்ச்சி பெறுவதற்கும் அதிகாரமுடைமையவர்களாக இருப்பதற்கும் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஊனமுற்ற பெண்கள் தங்களுடைய உரிமைகளை அனுபவிப்பதற்கு உத்திரவாதம் அளித்தல்.

என்பதை அனைத்து நாடுகளும் ஒத்துக்கொள்கின்றன.

பிரிவு – 7

ஊனமுற்ற குழந்தைகள்

1. பிற குழந்தைகளைப் போல ஊனமுற்ற குழந்தைகளும் அனைத்து உரிமைகளையும் பெறுவதை உறுதி செய்தல்.
2. குழந்தைகள் சம்பந்தப்பட்ட எந்த ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளும் பொழுதும் குழந்தையின் நலனுக்கு மிகவும் முக்கியமாக உள்ள நடவடிக்கைக்கு முன்னுரிமை அளித்தல்.
3. ஊனமுற்ற குழந்தைகள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கும் உரிமையை உறுதி செய்தல், அவர்களுடைய கருத்துக்களை கணக்கில் எடுத்துக் கொள்ளுதல், ஊனமுற்ற குழந்தைகள் தாங்கள் தெரிவிக்க விரும்பும் கருத்துக்களை வெளிப்படுத்த தேவைப்படும் உதவியை வழங்குதல்.

ஆகியவற்றை நாடுகள் உறுதி செய்யும்.

பிரிவு – 8

1. விழிப்புணர்வை உருவாக்குதல்

அ. நாடுகள் தாமதமின்றி பின்வரும் விஷயங்களில் உனமுற்ற நபர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை குடும்பங்களிலும் சமூதாயத்திலும் ஏற்படுத்த உதவி செய்தல். ஊனமுற்ற நபர்களின் உரிமைகள் மற்றும் மனித மாண்பு மதிக்கப்பட தேவையான நடவடிக்கைகளை உறுதி செய்தல்.

M. ஊனமுற்ற நபர்களைப் பற்றி வழக்கத்தில் இருந்து வரும் தவறான கருத்துக்கள் மற்றும் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக போராடுதல். கண்ணோட்டங்கள் என்பது மக்கள் ஊனமுற்ற நபர்கள் மீது வைத்திருக்கும் பொதுவான மற்றும் தவறான கருத்துக்கள். இக்கருத்துக்கள் ஊனமுற்ற நபர்களை பெருமளவு பாதித்து பாரபட்சத்தை உருவாக்கும் சூழ்நிலைகளை ஏற்படுத்துகின்றன.

இ. ஊனமுற்ற நபர்களின் திறமைகளையும் அவர்கள் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதையும் சமூகத்தினர் உணர்ந்து கொள்வதற்கு உதவுதல்.

2. மேலும் நாடுகள்:

அ. ஊனமுற்ற நபர்களின் உரிமைகள் பற்றிய பொது பிரச்சாரங்களை மேற்கொள்ளுவதன் மூலம்

1. எல்லா மக்களுக்கும் உள்ள உரிமைகள் அனைத்தும் ஊனமுற்ற நபர்களுக்கும் உள்ளது என்பதை காண்பித்தல்.
2. சமூதாயத்தில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் ஊனமுற்றவர்கள் பற்றிய தவறான புரிதல்களை மாற்றுதல்.
3. ஊனமுற்ற நபர்கள் வேலை செய்யும் இடங்களை முன்னேற செய்வதில் எவ்வாறு உதவுகின்றனர் என்பதை காண்பித்தல்.

ஆ. பள்ளிக்கூடங்கள் மற்றும் பிற கற்பிக்கும் இடங்கள் ஊனமுற்ற நபர்களை எவ்வாறு மதிக்க வேண்டும் என்பதை சொல்லிக் கொடுப்பதை உறுதி செய்தல்.

இ. ஊனமுற்ற நபர்களின் உரிமைகளை பாதுகாத்து மேம்படுத்தும் வகையில் உள்ள விஷயங்களை ஊடகங்கள் (வானொலி, தொலைக்காட்சி, பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள்) காண்பிப்பதை ஊக்கப்படுத்துதல்.
ஈ. மக்கள் ஊனமுற்ற நபர்களின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை பெறத் தேவையான பயிற்சிகளை கொடுத்தல்.

பிரிவு – 9
தடையற்ற சூழல்.

நகர்புறங்களிலும் கிராமப்புரங்களிலும் ஊனமுற்ற நபர்கள் கட்டிடங்கள், வெளியிடங்கள், போக்குவரத்து, தகவல்தொடர்பு, சேவைகள் போன்றவற்றில் எதிர்க்கொள்ளும் தடைகளை நாடுகள் நீக்க வேண்டும். இதன்மூலமாக ஊனமுற்ற நபர்கள் தங்களுடைய வாழ்க்கையை சுதந்திரமாக நடத்த வழி வகுக்கும்.

பின்வரும் விஷயங்களில் இது தொடர்பான விதிகளை உருவாக்கி செயல்படுத்த வேண்டும்:

அ. கட்டிடங்கள், சாலைகள், போக்குவரத்து உட்புற வெளிப்புற விஷயங்கள் உதாரணமாக பள்ளிக்கூடங்கள், வீடுகள், மருத்துவமனைகள், சுகாதார மையங்கள் மற்றும் வேலை செய்யும் இடங்கள்.
ஆ. தகவல், தகவல்தொடர்பு மற்றும் பிற விஷயங்கள் உதாரணமாக மின்னனு சேவை மற்றும் அவசரகால சேவைகள்.

மேலும் நாடுகள் பின்வரும் விஷயங்களில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்:
அ. பொதுமக்கள் பயன்படுத்தும் இடங்கள் மற்றும் சேவைகளில் தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்துதல் மற்றும் கண்காணிப்பதில் குறைந்தபட்ச வரையறைகளை ஏற்படுத்துதல்.
ஆ. பொதுமக்களுக்காக செயல்பட்டு வரும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் ஊனமுற்ற நபர்களும் பயன்படுத்தும் வகையில் தடையற்ற சூழலில் அமைந்திருப்பதை உறுதி செய்தல்.
இ. ஊனமுற்ற நபர்களுக்கு தேவைப்படும் தடையற்ற சூழ்நிலை பற்றிய பயிற்சிகளை சம்மந்தப்பட்ட நபர்களுக்கு வழங்குதல். பொதுமக்கள் பயன்படுத்தும் கட்டிடங்களில் புள்ளியெழுத்து மற்றும் எளிதில் படித்து புரிந்துகொள்ளும் வகையில் தகவல் விவரங்களை வைத்தல்.
ஈ. பொதுமக்கள் பயன்படுத்தும் கட்டிடங்களை ஊனமுற்ற நபர்களும் பயன்படுத்தும் வகையில் தேவையான ஒலிப்பான்கள், சைகை மொழி உதவியாளர் மற்றும் வழிகாட்டி போன்ற உதவிகளை வழங்குதல்.
உ. ஊனமுற்ற நபர்களும் தேவைப்படும் தகவல்களை பெறும் வகையில் பிற உதவிகளையும் வழங்குதல்.
ஊ. ஊனமுற்ற நபர்களும் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதற்கு வழி வகுத்தல்.

எ. புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கும் சந்தர்ப்பத்தில், ஆரம்பக் கட்டத்திலேயே அவை ஊனமுற்ற நபர்களும் பயன்படுத்தும் வகையில் உருவாக்கப்படும் பட்சத்தில் அதனை குறைந்த செலவிலேயே செயல்படுத்த முடியும்.

பிரிவு – 10
உயிர் வாழ்வதற்கான உரிமை

ஊனமுற்ற நபர்களுக்கும் உயிர் வாழ்வதற்கான உரிமை உண்டு என்பதை ஒப்புக்கொண்டு அவர்கள் இவ்வுரிமையை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதை அனைத்து நாடுகளும் உறுதி செய்ய வேண்டும்.

பிரிவு – 11
மனிதர்களுக்கான ஆபத்தான சூழ்நிலை மற்றும் நெருக்கடி காலங்கள்:

நாடுகள் தாங்கள் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட போர் மற்றும் மனித உரிமைகள் சம்மந்தப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தையும் மதிப்பதாக ஒப்புக்கொள்ளுதல்.

நாடுகள் போர், இயற்கை பேரழிவு அல்லது பிற நெருக்கடியான சூழ்நிலைகளில் ஊனமுற்றோரின் நலனை பாதுகாப்பதற்கான தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதி செய்ய வேண்டும்.

பிரிவு – 12
சட்டத்தின் முன் ஒரு சமமான நபர் என்ற அங்கீகாரம்

நாடுகள்:

1. ஊனமுற்ற நபர்கள் சட்டத்தின் முன் ஒரு மனிதன் என்ற அங்கீகாரத்தை பெறுவதற்கான உரிமையை ஏற்றுக் கொள்ளுதல்.
2. ஊனமுற்ற நபர்களும் பிற நபர்களை போல தங்களுடைய வாழ்க்கையில் அனைத்து விஷயங்களிலும் தொடர்புடைய சட்ட விஷயங்களில் தகுதி உடையவர்கள் என்பதை ஒப்புக் கொள்ளுதல்.
3. ஊனமுற்ற நபர்கள் சட்ட ரீதியான பிரச்சினைகளை மேற்கொள்ளும் பொழுது அதற்கு தேவைப்படும் உதவியை பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதை உறுதி செய்தல்.
4. சட்டம் மற்றும் நீதி சம்மந்தமான விவகாரங்களில் ஊனமுற்ற நபர்களுக்கு உதவி தேவைப்படும் சூழ்நிலையில்:
   - அவர்களுக்கு தவறாக பயன்படுத்தப் படுவதிலிருந்து பாதுகாப்பு அளித்தல்.
   - அவர்களுடைய உரிமைகள் மற்றும் விருப்பங்கள் மதிக்கப்படும்.
   - முடிவுகள் எடுப்பதில் ஊனமுற்ற நபர்களை அவர்களுக்கு உதவி செய்யும் நபர்கள் நிர்பந்திக்காமல் இருத்தல்.
   - தேவைப்படும் அளவிற்கும் காலத்திற்கும் மட்டுமே அவர்கள் பிறரிடமிருந்து உதவியை பெற்றுக் கொள்வார்கள்.
   - நீதி மன்றங்கள் அவர்கள் பெற்ற உதவியை பரிசீலனை செய்யும்.

5. மேலும் ஊனமுற்றவர்கள் பின்வரும் விஷயங்களை பெறுவதை உறுதி செய்தல் மற்றும் ஒப்புக் கொள்ளுதல்.
   - சொத்துக்கள் வாங்குவதற்கும், வைத்திருப்பதற்குமான உரிமை.
   - தங்களுடைய பணம் மற்றும் நிதி சம்மந்தபட்ட விவகாரங்களைப் பற்றிய அதிகாரங்களை தாமே வைத்திருக்கும் உரிமை.
   - கடன், அடமானம், வங்கிக்கடன் போன்ற விஷயங்களில் பிறரை போல அவர்களுக்கும் அதே வாய்ப்பு.
   - எந்த காரணமுமின்றி அவர்களுடைய சொத்துக்களை பிறர் அபகரிக்க முடியாது.

பிரிவு – 13
நீதி பெறுதல்

1. ஊனமுற்ற நபர்களும் பிறரை போல தங்களுடைய நாட்டில் நீதி சம்மந்தப்பட்ட விஷயங்களை பெறுவதற்கான நடவடிக்கைகளை நாடுகள் உறுதி செய்தல்.

   சட்ட செயல்பாடுகளில் பல்வேறு கட்டங்களிலும் ஊனமுற்ற நபர்களும் சிறந்த முறையில் ஈடுபடும் வகையில் சம்மந்தப்பட்ட சட்ட விதிகள் உருவாக்க பட்டிருத்தல் அல்லது அமைக்கப்பட்டிருத்தல் என்பதை உறுதி செய்தல். ஊதாரணம். சாட்சியம் அளித்தல்
2. காவல் துறை மற்றும் சிறைத்துறை போன்ற நீதி சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கு நாடுகள் போதுமான பயிற்சியை அளித்தல்.

பிரிவு – 14
சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு
1. நாடுகள்:
அ. பிற நபர்களுக்கு உள்ள சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் ஊனமுற்ற நபர்களுக்கும் உண்டு என்பதை உறுதி செய்தல்.
ஆ. தக்க காரணம் அல்லது சட்டத்திற்கு புறம்பான செயல் என்பதை தவிர ஊனம் என்ற காரணத்தின் அடிப்படையில் மட்டும் ஒரு ஊனமுற்ற நபருக்கு இவ்வுரிமைகள் மறுக்கப்பட கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும்.

2. ஒரு நபரின் சுதந்திரம் பறிக்கப்படும் சூழ்நிலையில் அதனை எதிர்க்கொள்ள தேவைப்படும் சட்ட ரீதியான பாதுகாப்பை வழங்குவதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

மேலும் அவர்கள் தங்களுடைய மனித உரிமைகளை அனுபவிப்பதற்கு தேவைப்படும் தனிப்பட்ட சூழ்நிலை மாற்றங்களை ஏற்படுத்தி கொடுப்பதை உறுதி செய்ய வேண்டும்.

பிரிவு – 15
தண்டனை, தரக்குறைவான செயல்கள், மனித தன்மையற்ற செயல்கள், கொடுமை, வதை ஆகியவற்றிலிருந்து விடுதலை.

1. எவரொருவரும் கொடூரமாகவோ, தரக்குறைவான மற்றும் மனித தன்மையற்ற வகையிலோ சித்திரவதை செய்யப்படக் கூடாது. தண்டிக்கப்பட கூடாது அல்லது நடத்தப்படக் கூடாது. எவரொருவரும் மருத்துவ மற்றும் அறிவியல் சோதனைக்கு வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்பட மாட்டார்கள்.
2. ஊனமுற்ற நபர்களும் பிறரைப் போல வன்கொடுமையிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு தேவையான சட்டங்கள் மற்றும் பிற நடவடிக்கைகளை செயல்படுத்த நாடுகள் ஒப்புக்கொள்கின்றன.

பிரிவு – 16
சுரண்டல், வன்முறை, மற்றும் கொடுமைகளிலிருந்து விடுதலை

நாடுகள்:

1. ஊனமுற்ற நபர்கள் தங்களுடைய வீட்டிலும் வெளியிலும் சுரண்டலுக்கும், கொடுமைக்கும் ஆளாக்கப்படாமல் இருக்கும் வகையிலான சட்டங்களையும் பிற செயல்பாடுகளையும் உருவாக்கும்.
2. ஊனமுற்ற நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரை கொடுமைகளிலிருந்து பாதுகாப்பதற்காக, அவர்களை சுரண்டலிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை உறுதி செய்யும் வகையில் அவர்களுக்கு உதவி மற்றும் சரியான தகவல்களை கொடுத்தல்.
3. ஊனமுற்ற நபர்களுக்காக செயல்படும் நிறுவனங்கள் மற்றும் திட்டங்கள் எந்த ஒரு வன்முறை அல்லது கொடுமைகளை ஊனமுற்ற நபர்களுக்கு இழைக்காமல் செயல்படுவதை கண்காணித்தல்.
4. ஊனமுற்ற நபர்கள் வன்முறை மற்றும் கொடுமைக்கு ஆளாகும் பட்சத்தில் அவர்களுடைய மீட்சி மற்றும் சமூதாய மறு ஒருங்கிணைப்பிற்கு தேவைப்படும் உதவிகளை செய்தல்.
5. ஊனமுற்ற நபர்களை தவறாக நடத்துதல் மற்றும் கொடுமைப்படுத்துதல் போன்ற விஷயங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிரான விசாரனை மற்றும் தண்டனை சம்மந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்குதல். இச்சட்டங்களிலும் கொள்கைகளிலும் ஊனமுற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளின் பிரச்சினைகளும் சேர்க்கப்பட வேண்டும்.

பிரிவு – 17
உண்மைத்தன்மையை பாதுகாத்தல்

ஊனமுற்ற நபர்களுக்கும் பிறரைப் போல அவர்களுடைய உடல் மற்றும் மன ரீதியான முழுமைத்தன்மையை பிறர் மதிக்க வேண்டும் என்ற உரிமை உண்டு.

பிரிவு – 18
இடம் பெயர்தல் மற்றும் குடியுரிமைக்கான சுதந்திரம்

1. ஊனமுற்ற நபர்களும் பிறரைப் போல தங்களுடைய நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடம் பெயர்ந்து செல்லவும்

அல்லது பிற நாடுகளுக்கு செல்லவும், தங்களுடைய இருப்பிடத்தை தேர்ந்தெடுக்கவும் தங்களுடைய குடியுரிமைப் பெறவும் உரிமை உண்டு என்பதை ஒவ்வொரு நாடும் ஏற்றுக் கொள்கிறது. மேலும் ஒவ்வொரு நாடும் ஊனமுற்ற நபர்களுக்காக பின்வரும் விஷயங்களை உறுதி செய்யும்.

அ. குடியுரிமைப் பெறவும் அதனை மாற்றிக் கொள்ளவும் உள்ள உரிமை வேறு எந்த காரணமுமின்றி ஊனத்தைக் காரணம் காட்டி அவர்களுடைய குடியுரிமையை எவராலும் மறுக்க முடியாது.

ஆ. எந்த ஒரு காரணமுமின்றி ஊனம் என்ற அடிப்படையில் அவர்களுடைய குடியுரிமைக்கான அடையாள அட்டைகளை மறுக்க கூடாது. மேலும் அவர்கள் வேறு ஒரு நாட்டிற்கு செல்வதற்கான முயற்சியை அனுமதிக்க வேண்டும்.

இ. தங்களுடைய நாட்டையோ பிற நாடுகளையோ விட்டு செல்ல அவர்களுக்கு சுதந்திரம் உண்டு.

ஈ. தக்க காரணமின்றி ஊனத்தின் காரணமாக அவர்களை தங்களுடைய சொந்த நாட்டிற்குள் நுழைவதை தடுக்க முடியாது.

2. ஊனமுற்ற குழந்தைகள் பிறந்த உடனேயே அவர்களுடைய பிறப்பை பதிவு செய்ய வேண்டும். அவர்களுக்கு பெயர், குடியுரிமை, தன்னுடைய பெற்றோர் யார் என்று தெரிந்துக் கொள்ளும் உரிமைகள் உண்டு. மேலும் அவர்களுடைய சொந்த பெற்றோர்களாலேயே வளர்க்கப்பட வேண்டும்.

பிரிவு – 19

சுதந்திரமாக வாழுதல் மற்றும் சமூதாயத்துடன் இணைக்கப்படுதல்

ஊனமுற்ற நபர்களும் பிறரைப் போல சமூதாயத்தில் வாழ வேண்டும் என்ற உரிமையும், சமூதாய செயல்பாடுகளில் அவர்களும் முழுமையாக ஈடுபடவும், பங்கேற்கவும் உரிமை உண்டு என்பதை அனைத்து நாடுகளும் ஒப்புக்கொள்கின்றன. அவற்றை பின்வரும் செயலபாடுகளில் உறுதி செய்ய வேண்டும்.

1. பிறருக்கு உள்ள வாய்ப்புகளைப் போல இவர்களுக்கும் யாருடன் எங்கு வாழ விரும்பமோ அதற்கான வாய்ப்புகள் உண்டு. கட்டாயத்தின் பேரில் அவர்களுக்கு விருப்பமில்லாத இடங்களிலோ நிறுவனங்களிலோ அவர்களை சேர்க்க கூடாது.
2. ஊனமுற்ற நபர்களை தனிமைப்படுத்தாமல் இருத்தல், சமூதாயத்தில் வாழுதல், உதவியாளர், சமூதாயத்தில் இணைவதற்கு உதவி செய்தல் போன்ற பல்வேறு வகையான விருப்பங்களோடு சமூதாயத்தில் எங்கு எப்படி வாழ்வது என்ற உரிமை.
3. பொது மக்களுக்காக செயல்படும் அனைத்து சமூதாய சேவைகளையும் ஊனமுற்ற நபர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அவை அதற்கேற்றார் போல் மாற்றியமைக்கப்பட வேண்டும்

பிரிவு – 20

தனிநபர் இடப்பெயர்ச்சி

ஊனமுற்ற நபர்கள் அதிகபட்ச சுதந்திரத்தோடு ஓரிரத்திரலிருந்து மற்றொரு இடத்திற்கு சென்று வருவதை உறுதி செய்வதற்கு நாடுகள் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

1. ஊனமுற்ற நபர்கள் தாங்கள் விரும்பும் வகையிலும் அவர்களுடைய பொருளாதார தகுதிக்கு ஏற்ற வகையிலும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சென்று வருவதற்கு உதவி செய்தல்.
2. ஊனமுற்ற நபர்கள் அதிக செலவில்லாத வகையில் உதவி உபகரணங்களையும் தொழில்நுட்பத்தையும் பெறுவதற்கு உதவி செய்தல்.
3. ஊனமுற்ற நபர்களுக்கும் அவர்களுடன் வேலை செய்பவர்களுக்கும் நடைப் பயிற்சி திறன் சம்பந்தப்பட்ட பயிற்சிகளை வழங்குதல்.
4. உதவி உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை உருவாக்கும் நபர்களை அவர்கள் அனைத்து விதமான இயக்கம் சம்மந்தப்பட்ட வி ஷயங்களிலும் கவனம் செலுத்த ஊக்குவித்தல்.

பிரிவு – 21

தகவல் பெறுதல் மற்றும் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம்

ஊனமுற்ற நபர்கள் தாங்கள் கூற விரும்பும் கருத்துக்களை புள்ளியெழுத்து மூலமாகவோ, சைகை மொழி மூலமாகவோ அல்லது பிற தகவல் தொடர்பு வழிமுறை மூலமாகவோ அவர்கள் விருப்பப்படி தெரிவிப்பதற்கு உள்ள உரிமையை உறுதி செய்ய வேண்டும்.

ஊனமுற்ற நபர்களும் பிறரைப் போல கீழ்கண்ட விஷயங்களில் தகவல்களை கொடுப்பதற்கும் பெறுவதற்கும் உரிமை உண்டு என்பதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

1. பொது மக்களுக்கு அளிக்க விரும்பும் தகவல்களை ஊனமுற்ற நபர்களுக்கும் அவர்களும் பயன்படுத்தும் வடிவில் கூடுதல் செலவின்றி வழங்க வேண்டும். உதாரணம். புள்ளி எழுத்துக்களில்
2. அதிகார பூர்வமான சூழ்நிலைகளிலும் ஊனமுற்ற நபர்கள் பயன்படுத்தும் பலவிதமான தகவல் தொடர்பு முறைகளையும் ஏற்றுக் கொள்ளுதல்.
3. பொது மக்களுக்காக பணியாற்றும் தனியார் வியாபார அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் தங்களுடைய சேவைகளை ஊனமுற்ற நபர்களும் பயன்படுத்தும் வகையில் அமைக்க ஊக்குவிக்க வேண்டும்.
4. ஊடகங்கள் தாங்கள் தங்களுடைய தகவல்களை ஊனமுற்ற நபர்களும் பயன்படுத்தும் வகையில் தெரிவிப்பதற்கு ஊக்குவித்தல்.
5. சைகை மொழியை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.

பிரிவு – 22

தனிமையை மதித்தல்

நாடுகள்:

1. தக்க காரணமின்றி எவரொருவரும் ஊனமுற்ற நபரின் தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிடாமல் இருப்பதை உறுதி செய்தல். மேலும் எவரொருவரும் சட்டத்திற்கு புறம்பாக ஊனமுற்ற நபரின் மதிப்பிற்கும் புகழுக்கும் கலங்கம் விழைவிக்காது இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அத்தகைய தாக்குதலிருந்து சட்டபூர்வமான பாதுகாப்பை பெறும் உரிமை ஊனமுற்ற நபர்களுக்கு உண்டு.
2. பிற நபர்களின் சொந்த விஷயங்களை ரகசியமாக வைத்திருப்பது போல ஊனமுற்ற நபர்களின் தனிப்பட்ட, சுகாதார மற்றும் மறுவாழ்வு சம்மந்தப்பட்ட தகவல்களை ரகசியமாக வைத்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

பிரிவு – 23

வீடு மற்றும் குடும்பத்தை மதித்தல்

1. திருமணம் மற்றும் குடும்ப உறவு என்ற விஷயங்களை பொருத்தவரையில் ஊனமுற்ற நபர்கள் சந்திக்கும் பாரபட்சங்களை தடுக்க நாடுகள் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவற்றை உறுதி செய்ய,
   அ. ஊனமுற்ற நபர்களும் பிறரைப் போல திருமணம் செய்து கொள்ளவும், குடும்ப வாழ்க்கையை நடத்தவும் உரிமை உண்டு.
   ஆ. ஊனமுற்ற நபர்களுக்கும் பிறரைப் போல குழந்தைகள் பெற்றுக் கொள்வதற்கும், எத்தனை குழந்தைகள் எப்பொழுது பெற்றுக் கொள்வது என்ற முடிவு எடுப்பதற்கும் உரிமை உண்டு. மேலும் மகப்பேறு குடும்ப நலத்திட்டம் போன்ற விஷயங்களில் தேவைப்படும் தகவல்கள் மற்றும் விழிப்புணர்வு கல்வியும் வழங்கப்பட வேண்டும். இத்தகவல்களை புரிந்துக் கொள்வதற்கான உதவியும் அவர்களுக்கு வழங்கபட வேண்டும்.
   இ. ஊனமுற்ற நபர்களும் பிறரைப் போல கருவுருவதற்கான தன்மையை வைத்துக் கொள்ள உரிமை உண்டு.
2. நாடுகள் ஊனமுற்ற நபர்களும் குழந்தைகளை தத்தெடுப்பதற்கும் பாதுகாவலராக செயல்படுவதற்குமான உரிமைகள் மற்றும் பொறுப்புக்களை உறுதி செய்ய வேண்டும். (இதில் குழந்தைகளில் நலன் சம்மந்தப்பட்ட விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதை உறுதி செய்தல் அவசியம்.) அவ்வாறான சூழ்நிலையில் ஊனமுற்ற நபர்கள் அக்குழந்தைகளை வளர்ப்பதற்கு தேவையான உதவிகளை நாடுகள் வழங்க வேண்டும்.
3. ஊனமுற்ற குழந்தைகளும் பிறரைப் போல குடும்ப வாழ்க்கையை அனுபவிப்பதற்கான உரிமையை நாடுகள் உறுதி செய்ய வேண்டும். இது சம்மந்தமான தகவல்கள் சேவைகள் மற்றும் உதவிகளை ஊனமுற்ற குழந்தைகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் ஆரம்பக்கட்டத்திலிருந்தே நாடுகள் வழங்க வேண்டும்.
4. குழந்தையின் நலனை கருதி சட்டபூர்வமான முறையில் அன்றி எந்தவொரு ஊனமுற்றக் குழந்தையையும் அவர்களுடைய விருப்பத்திற்கு எதிராக பெற்றவர்களிடமிருந்து பிரிக்க கூடாது.

பெற்றோர் அல்லது குழந்தைகளின் ஊனத்தைக் காரணமாக காட்டி எந்த ஒரு குழந்தையையும் அவர்களுடைய பெற்றோரிடமிருந்து பிரிக்க கூடாது.

5. ஒரு ஊனமுற்ற குழந்தையை அதனுடைய நெருங்கிய குடும்பத்தினர் (பெற்றோர், சகோதர, சகோதரிகள்) பராமரிக்க முடியாத சூழ்நிலையில் அக்குழந்தையை கவணித்துக் கொள்வதற்கு முதலில் அவர்களுடைய சொந்தக் காரர்களையோ அல்லது உள்ளூர் சமூதாயத்தையோதான் முதலில் அணுக வேண்டும்.

பிரிவு – 24
கல்வி

1. அனைத்து நாடுகளும் ஊனமுற்ற நபர்களுக்கு கல்வி பெறுவதற்கு உரிமை உண்டு என்பதை ஒப்புக் கொள்கின்றன. மேலும் கல்வி முறையானது அனைத்து நிலையிலும் ஊனமுற்ற நபர்களை உள்ளடக்கியதாக இருப்பதை உறுதி செய்யும். மேலும் கல்வி முறையானது:

   அ. ஒவ்வொருவரும் தங்களுடைய மனித ஆற்றல், மாண்பு, சுயத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்திக் கொள்வதற்கும், மனித உரிமைகள், சுதந்திரம் மற்றும் வேற்றுமைகளை மதிக்கும் வகையிலும் தக்க செயல்களை உறுதி செய்ய வேண்டும்.

   ஆ. ஒவ்வொரு நபரும் தங்களுடைய முழு ஆற்றலையும் பயன்படுத்தி ஆளுமைத் தன்மை மற்றும் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் செயல்பட வேண்டும்.

   இ. ஊனமுற்ற நபர்கள் அனைவரும் சமூதாயத்தில் இணைந்திருப்பதை உறுதி செய்யும் செயல்களை மேற்கொள்ளுதல்.

2. இவற்றை செய்வதற்கு நாடுகள் பின்வரும் விஷயங்களை உறுதி செய்யும்:

   அ. ஊனமுற்ற நபர்கள் அவர்களுடைய ஊனத்தின் காரணமாக கல்வி கற்பதிலிருந்து விலக்கி வைக்கப்பட மாட்டார்கள். மேலும் ஊனமுற்ற குழந்தைகள் தங்களுடைய ஊனத்தின் காரணமாக இலவச மற்றும் கட்டாய ஆரம்பம் மற்றும் இடைநிலை கல்வியிலிருந்து விலக்கி வைக்கப்பட மாட்டார்கள்.

   ஆ. ஊனமுற்ற நபர்கள் அனைவரும் தங்களை உள்ளடக்கிய, தாங்கள் தடையின்றி பயனடையக் கூடிய, மற்றும் தங்களுடைய சமூதாயத்திலேயே கிடைக்க கூடிய கல்வி முறையை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

   இ. ஊனமுற்ற நபர்கள் கல்வியின் மூலமாக அதிக அளவிற்கு பயன் பெறுவதை உறுதி செய்வதற்கு தேவைப்படும் யதார்த்தமான மாற்றங்களை மேற்கொள்ளுதல்.

   ஈ. ஊனமுற்ற நபர்கள் கல்வியின் மூலமாக அதிக அளவில் பயன் பெறுவதற்கு தேவையன உதவிகளை செய்தல்.

   உ. ஊனமுற்ற மாணாக்கர்கள் தங்களுடைய தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தேவைப்படும் உதவிகளை வழங்குதல்.

3. ஊனமுற்ற நபர்கள் சமூதாயத்தில் வாழ்வதற்கும், பள்ளிக்குச் செல்வதற்கும் தேவைப்படும் சமூக மற்றும் வாழ்க்கை திறன்களை கற்க

தேவைப்படும் அனைத்து சாத்தியக் கூறுகளையும் நாடுகள் ஏற்படுத்திக் கொடுக்கும். இவற்றை பின்வரும் வழிகளில் நாடுகள் மேற்கொள்ளும்:

அ.. சக மாணவர்களின் உதவி மற்றும் பிறரைப் பின்பற்றுதல் ஆகியவற்றை பெறும் வகையில் தேவைப்படும் புள்ளியெழுத்துக்கள் அல்லது பிற தகவல் தொடர்பு வழிமுறைகளை ஊனமுற்ற மாணவர்கள் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்தல்.

ஆ. சைகை மொழியைக் கற்றுத் தருதல்

இ. கல்வியின் மூலம் அதிக பயன் பெறும் வகையில் குறிப்பாக பார்வையற்ற, செவித்திறன் அற்ற, மற்றும் பார்வை மற்றும் செவித்திறனற்ற குழந்தைகளுக்கு அவர்கள் கல்வி கற்பதற்கு தேவைப்படும் சரியான தகவல் தொடர்பு முறைகளை உறுதி செய்தல்.

4.இந்த உரிமைகளை செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கு நாடுகள், ஊனமுற்ற நபர்களுக்கு தரமான கல்வி அளிக்கும் வகையில் தங்களுடைய கல்வித்துறையில் அனைத்து நிலைகளிலும் உள்ள பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தகுதி வாய்ந்த ஊனமுற்ற ஆசிரியர்கள் மற்றும் புள்ளியெழுத்து, சைகை மொழி ஆகியவற்றில் தேர்ச்சிப் பெற்ற ஆசிரியர்கள் மூலமாக பயிற்சி அளிக்க வேண்டும்.

5. பிறரைப் போல ஊனமுற்ற நபர்களும் தொழிற்கல்வி, உயர்நிலைக்கல்வி மற்றும் வாழ்க்கை முழுமைக்குமான கற்றல் போன்ற அனைத்து வி ஷயங்களையும் சம அளவில் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல். மேலும் அவற்றைப் பெறுவதற்கு தேவைப்படும் தக்க மாற்றங்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

பிரிவு – 25
சுகாதாரம்

ஊனம் என்ற காரணத்தின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாமல் ஊனமுற்ற நபர்களும் பிறருக்கு வழங்குவதைப் போன்ற தரமான சுகாதார சேவையை பெறும் உரிமையை பெற்றுள்ளனர், என்பதை ஒவ்வொரு நாடும் புரிந்து கொள்கின்றன.

ஒவ்வொரு நாடும் பின்வரும் விஷயங்களில் சுகாதாரம் மற்றும் சுகாதாரம் சம்மந்தப்பட்ட மறுவாழ்வு சேவைகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

அ. பிறருக்கு கிடைப்பதைப் போல ஊனமுற்ற நபர்களுக்கும் தரமான பொதுவான பல்வேறுப்பட்ட இலவச மற்றும் குறைந்த செலவில் சுகாதார சேவைகள் கிடைப்பதை உறுதி செய்தல்.

ஆ. ஊனமுற்ற நபர்கள் தங்களுடைய குறைபாடு தொடர்புடைய மற்றும் இருக்கக் கூடிய குறைபாடு மேலும் பாதிப்படையாமல் பாதுகாப்பதற்கும் தேவைப்படும் சேவைகளை பெறுவதை உறுதி செய்தல்.

இ. சுகாதார சேவைகள் மக்களுடைய சமூதாயத்திலேயே கிடைக்கச் செய்தல்.

ஈ. சுகாதாரப் பணியாளர்கள் பிறருக்கு வழங்குவதைப் போலவே ஊனமுற்ற நபர்களுக்கும் தரமான சேவையை வழங்க வலியுறுத்தல். உதாரணமாக சுகாதார சேவையில் உருவாக்கப்பட்டுள்ள பொதுவான நெறிமுறைகள் மற்றும் பயிற்சியின் அடிப்படையில் ஊனமுற்ற நபர்களுடைய ஒப்புதல் அவர்களுடைய உரிமைகள் பற்றித் தெளிவுப் படுத்துதல்.

a. சுகாதாரக் காப்பீடு மற்றும் ஆயுள் காப்பீடு போன்ற விஷயங்களைப் பொருத்தவரை ஊனமுற்ற நபர்களுக்கு எதிராக உள்ள பாரபட்சங்களை நீக்க வேண்டும். இவற்றை நியாயமான முறையில் அவர்களுக்கு வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

ஊ. ஊனமுற்ற நபர்களுக்கு அவர்களுடைய ஊனத்தின் காரணமாக சுகாதார சேவை, சுகாதார பராமரிப்பு, உணவு மற்றும் பிற நீர் ஆகாரங்களை மறுக்கும் எந்த ஒரு பாரபட்சமான செயல்களையும் தவிர்ப்பதை உறுதி செய்தல்.

பிரிவு – 26

வாழ்வு மற்றும் மறுவாழ்வு

1. ஊனமுற்ற நபர்கள் அதிகபட்ச சுதந்திரத்தை அனுபவிப்பதை சாத்தியமாக்கவும் முழு திறமையை பயன்படுத்துவதற்கும் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் ஈடுபடுவதற்கும் தேவைப்படும் நடவடிக்கைகளை (உதாரணமாக. ஒத்த வயதினருடைய உதவி) மேற்கொள்ளும். இவற்றை உறுதி செய்வதற்கு நாடுகள் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் அடைவதற்கு தேவைப்படும் சேவைகளை (வாழ்வு மற்றும் மறுவாழ்வு) கிடைக்கச் செய்யும். ஆகவே:

   அ. எவ்வளவு சீக்கிரம துவங்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம துவங்குதல், ஒரு தன்ப்பட்ட நபரினுடைய பலம் மற்றும் தேவைகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப குறிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

   ஆ. ஊனமுற்ற நபர்களும் சமூதாய செயலபாடுகளில் பங்கேற்கவும், ஈடுபடவும் உதவ முடியும்.

   இ. சமூதாயத்திற்கு தன்னார்வத்தோடு அதன் அருகிலிருந்தே உதவ முடியும்.
2. வாழ்வு மற்றும் மறுவாழ்வு சேவையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தேவையான பயிற்சிகளை ஏற்பாடு செய்வதை நாடுகள் மேற்கொள்ளும்.
3. வாழ்வு மற்றும் மறுவாழ்வு சம்மந்தப்பட்ட உதவி உபகரணங்களையும் பிற உதவிகளையும் பயன்படுத்துவதை நாடுகள் ஊக்குவிக்கும்.

பிரிவு – 27
பணி மற்றும் வேலைவாய்ப்பு

1. ஊனமுற்ற நபர்களும் பிறரைப் போல வேலை செய்வதற்கான உரிமையை பெற்றுள்ளனர் என்பதை நாடுகள் ஏற்றுக் கொள்கின்றன. அதாவது அனைத்து மக்களும் தங்குதடையின்றி சுதந்திரமாக வேலை செய்யும் சூழ்நிலையில் அமைந்துள்ள பணியைத் தேர்ந்தெடுத்து அதன்மூலமாக வாழ்க்கைக்கு தேவையான வருமானத்தை பெறும் உரிமை ஊனமுற்ற நபர்களுக்கு உண்டு.

நாடுகள் பின்வரும் விஷயங்களில் தேவைப்படும் சட்டங்களையும் செயல்பாடுகளையும் உருவாக்கும்:

அ. எல்லாவிதமான வேலைவாய்ப்புகளிலும் உள்ள பல சூழ்நிலைகளிலும் ஊனத்தின் காரணமாக எழக்கூடிய பாகுபாடுகளை தடுத்தல். உதாரணமாக ஊனமுற்ற நபர்கள் வேலை தேடி முயற்சி செய்யும் நேரத்தில், வேலைக்கு சேர்த்துக் கொள்ளும் சூழ்நிலையில், பதவி உயர்வு சமயத்தில் மற்றும் வேலை சூழலானது பாதுகாப்பானதாகவும், ஆரோக்கியமானதாகவும் இருக்கும் சூழ்நிலை போன்ற விஷயங்களில்.

ஆ. சம வேலைக்கு சம ஊதியம், சமவாய்ப்பு, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணி சூழல் மற்றும் புகார் கொடுப்பதற்கான திறமை போன்ற உரிமைகள் ஊனமுற்ற நபர்களுக்கு பாதுகாக்கப்பட வேண்டும்.

இ. ஊனமுற்ற நபர்களும் மற்றவர்களைப் போல தங்களை ஒருங்கிணைத்துக் கொள்ளவும், தொழிலாளர் சங்கம் மற்றும் தொழிற் சங்கங்களில் சேர்வதற்கும் உறுதி அளிக்கப்பட வேண்டும்.

ஈ. ஊனமுற்ற நபர்களும் தொழிற்பயிற்சி மற்றும் தொழில் ஆலோசனை பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்க வேண்டும்.

உ. வேலைவாய்ப்பை உருவாக்குதல் முன்னேறச் செய்தல், வேலையைக் கண்டுபிடித்தல், மற்றும் வேலையில் தொடருதல் போன்ற விஷயங்களில் ஊனமுற்ற நபர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

ஊ. சுயவேலைவாய்ப்பு, தொழில் வாய்ப்புகள் மற்றும் தொழில் துவங்குதல் போன்றவற்றை மேம்படுத்துதல்.

எ. அரசாங்கப் பணிகளில் ஊனமுற்ற நபர்களை வேலைக்கு அமர்த்துதல்.

ஏ. ஊனமுற்ற நபர்களை பணியில் அமர்த்துவதில் வேலை அளிப்பவர்களுக்கு உதவுதல் மற்றும் ஊக்குவித்தல்.

ஐ. தேவையான சலுகைகள் ∴ படிகளை வழங்குவதை உறுதி செய்வதின் மூலம் ஊனமுற்ற நபர்கள் பணியிடங்களிலும், பணிசூழலிலும் வசதியாக இருக்க முடியும்.

ஒ. தொழிலாளர் சந்தையில் ஊனமுற்ற நபர்களும் பணி அனுபவம் பெறுவதற்கான செயல்களை உறுதி செய்தல்.

ஓ. ஊனமுற்ற நபர்கள் தங்களுடைய வேலைக்குத் திரும்பவும், தங்களுடைய வேலையை தக்க வைத்துக் கொள்ளவும் உதவும் வகையில் தேவையான தொழில் மற்றும் தொழில் நுட்ப ரீதியான மறுவாழ்வு மற்றும் திட்டங்களை உருவாக்குதல்.

2. ஊனமுற்ற நபர்கள் ஒரு கொத்தடிமையாக நடத்தப்படுவதை தவிர்ப்பதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும். மேலும் மற்றவர்களை பாதுகாப்பதைப் போல ஊனமுற்ற நபர்களையும் கட்டாய உழைப்பிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

பிரிவு – 28

போதுமான வாழ்க்கைத் தரம் மற்றும் சமூக பாதுகாப்பு

1. ஊனமுற்ற நபர்கள், அவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் போதுமான வாழ்க்கைத் தரத்தில் வாழும் உரிமை உடையவர்கள் என்பதை நாடுகள் அங்கிகரிக்கின்றன. இதில் போதுமான உணவு, உடை, இருப்பிடம் மற்றும் தொடர்ந்து தங்களுடைய வாழ்க்கை சூழ்நிலையை முன்னேற்றிக் கொள்ளுதல் போன்றவை அடங்கும்.
2. ஊனமுற்ற நபர்களுக்கும் அவர்களின் ஊனத்தை காரணம் காட்டி பாகுபடுத்தாமல் அரசாங்கத்தின் மூலமாக சமூக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்ற உரிமையை நாடுகள் அங்கிகரிக்கின்றன. இவ்வுரிமைகளை பாதுகாக்க நாடுகள் பின்வரும் நடவடிக்கைகளை உறுதி செய்யும்.

   அ. ஊனமுற்ற நபர்கள் தங்களுடைய ஊனம் தொடர்பாக தேவைப்படும் சேவைகள், கருவிகள் மற்றும் உதவிகளை பெற முடியும்.

   ஆ. ஊனமுற்ற நபர்கள் வறுமையிலிருந்து மீள்வதற்கு தேவையான சமூக நலத் திட்டங்கள் மற்றும் உதவிகளை பெறுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்துதல். இதுக் குறிப்பாக ஊனமுற்ற பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்களுக்குப் பொருந்தும்.

   இ. வறுமையில் வாழும் ஊனமுற்ற நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் ஊனம் தொடர்பாக எதிர்கொள்ளும் செலவுகளை சமாளிக்க அரசிடமிருந்து உதவி பெறலாம்.

   ஈ. ஊனமுற்ற நபர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் செயல்படுத்தப்படும் வீட்டு வசதி திட்டத்தில் பயனடைய வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

   c. ஊனமுற்ற நபர்கள் ஓய்வூதியம் பெற முடியும்.

பிரிவு – 29
அரசியலிலும் பொது வாழ்விலும் பங்கேற்றல்

நாடுகள் எந்த ஒரு பாரபட்சமுமின்றி ஊனமுற்ற நபர்களின் அரசியல் உரிமைகளை அங்கிகரிக்கின்றன. அதன்படி

அ. ஊனமுற்ற நபர்கள் அரசியல் மற்றும் பொது வாழ்வில் முழுமையாக ஈடுபடுவதை உறுதி செய்ய வேண்டும். (உதாரணமாக வாக்களிப்பதறகான உரிமை, தேர்ந்தெடுக்கப்படுதல்) இவற்றை செயல்படுத்துவதற்கு பின்வரும் விஷயங்களை உறுதி செய்ய வேண்டும்.

- வாக்களிக்கும் முறையானது எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும், பயன்படுத்தும் வகையிலும் அமைய வேண்டும்.
- குடிமக்கள் ரசசியமாக வாக்களிப்பதற்கான உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் தேர்ந்தெடுக்கப்படுதல்
- ஊனமுற்ற நபர்கள் தாங்கள் விரும்பியோரின் உதவியோடு வாக்களித்தல்.

ஆ. ஊனமுற்ற நபர்களை அரசாங்கம் மேற்கொள்ளும் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவித்தல் மற்றும் பொது விவகாரங்களில் பங்கேற்க செய்தல். உதாரணமாக:

- சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் செயல்பாடுகளில் கவனம் செலுத்தும் அரசு சாரா அமைப்புகள் மற்றும் சங்கங்களின் பணிகளில் ஈடுபடுதல்.
- ஊனமுற்ற நபர்களின் சார்பாக தேசிய அளவில், மண்டல அளவில் மற்றும் உள்ளூர் அளவில் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஊனமுற்ற நபர்களின் அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் அவற்றில் சேர்ந்துக் கொள்ளுதல்.

பிரிவு – 30
கலாசார வாழ்க்கை, பொழுது போக்கு, ஓய்வு மற்றும் விளையாட்டுகளில் பங்கேற்பு

1. ஊனமுற்ற நபர்கள் கலாச்சார நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான உரிமைகளை நாடுகள் அங்கிகரிக்கின்றன. இதனை உறுதி செய்யும் வகையில் அவை பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்:
   அ. ஊனமுற்ற நபர்கள் இலக்கியம் போன்ற விஷயங்களை புள்ளியெழுத்து, ஒலிநாடா மற்றும் சைகை வடிவில் பெறுவதற்கான வாய்ப்புகளை பெற்றிருத்தல்.
   ஆ. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், நாடகங்கள் போன்ற கலைநிகழ்ச்சிகள் ஊனமுற்ற நபர்களும் புரிந்துக் கொள்ளும் வகையில் அமைக்கப்பட வேண்டும். (உதாரணமாக சைகை மொழி, வாசகங்கள் மூலமாக)
   இ. ஊனமுற்ற நபர்கள் நூலகங்கள், அருங்காட்சியகங்கள், திரையரங்குகள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் போன்ற கலை தொடர்பான சேவைகளை பயன்படுத்திக் கொள்ள முடியும்.
2. ஊனமுற்ற நபர்கள் தங்களுடைய படைப்பாற்றல், கலையாற்றல் மற்றும் அளிவாற்றலை பயன்படுத்துவதையும், மேம்படுத்துவதையும் சாத்தியப் படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை நாடுகள் மேற்கொள்ளும்.
3. ஆவணங்கள், எழுத்துக்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை பிறர் தவறாக பயன்படுத்துவதிலிருந்தும், பிரதி எடுப்பதிலிருந்தும் பாதுகாக்கும் சட்டங்கள் ஊனமுற்ற நபர்களை பாகுபடுத்தாமல் இருப்பதற்கான செயல்களை அரசாங்கம் மேற்கொள்வதை உறுதி செய்யும்.
4. ஊனமுற்ற நபர்களுக்கும் பிறரைப் போல தங்களுடைய கலாச்சாரத்தையும், மொழியையும் பிறர் அங்கிகரிக்க வேண்டும் என்ற உரிமை உண்டு. (உதாரணம்: சைகை மொழி, காது கேளாதோரின் கலாச்சாரம்)
5. ஊனமுற்ற நபர்களும் பிறரைப் போல பொழுது போக்கு, ஓய்வு மற்றும் விளையாட்டுகளில் பங்கேற்பதற்கான உரிமை உண்டு என்பதை அங்கிகரிக்க வேண்டும். இது சம்மந்தமாக அவை பின்வரும நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
   - ஊனமுற்றவர்களும், ஊனம் இல்லாதவர்களோடு எல்லா நிலையிலும் விளையாட்டுகளில் ஈடுபடுவதை ஊக்கப்படுத்துதல் மற்றும் ஆதரித்தல்.

- ஊனமுற்ற நபர்களும் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும், பங்கேற்பதற்குமான வாய்ப்புகளை உறுதி செய்தல். மேலும் இது சம்மந்தமாக பிறருக்கு வழங்கப்படும் பயிற்சிகள் மற்றும் உதவிகள் இவர்களுக்கும் வழங்க வேண்டும்.
- ஊனமுற்ற நபர்களும் பிறருக்கு உள்ளது போல விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு அரங்கங்கள் வழங்கப்பட வேண்டும்.
- ஊனமுற்ற குழந்தைகளும் பிற குழந்மைகளைப் போல பள்ளிக் கூடங்களில் விளையாட்டுகளில் பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும்.
- ஊனமுற்ற நபர்கள் பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்கு உதவும் வகையில் தேவைப்படும் சேவைகளை உறுதி செய்தல்.

பிரிவு – 31
புள்ளிவிவரம் மற்றும் தகவல் சேகரித்தல்

1. இந்த ஒப்பந்தத்தை செயல்படுத்துவது தொடர்பாக நாடுகள் தேவையான புள்ளிவிவரம் மற்றும் தகவல்களை சேகரித்து பரிசீலனை செய்யும். இத்தகவல்களை திரட்டும் பொழுது அவை:
   - மக்களின் அந்தரங்க உரிமையை மதித்தல். மக்கள் சம்மதிக்கும் சூழ்நிலையில் மட்டுமே தகவல்கள் கொடுக்கப்பட வேண்டும்.
   - புள்ளிவிவரங்களை சேகரிக்கும் பொழுதும், பயன்படுத்தும் பொழுதும் மனித உரிமைகளையும், அறநெறியையும் மதிக்க வேண்டும்.
2. சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் மற்றும் தகவல்கள் பல பிரிவுகளாக இருக்கும் பட்சத்தில் அதனைக் கொண்டு நாடுகள் இவ்வொப்பந்தத்தை சிறந்த முறையில் செயல்படுத்தவும், ஊனமுற்ற நபர்களுக்கு உள்ள பல்வேறுத் தடைகளையும் புரிந்து கொள்ள வசதியாக இருக்கும்.
3. ஊனமுற்ற நபர்களும் எளிதில் தெரிந்து கொள்ளும் வகையில் இத்தகவல்களை (புள்ளியெழுத்துக்கள், எளிதில் படிக்க கூடிய வடிவங்கள்) வெளியிடுவதை உறுதி செய்வது ஒவ்வொரு நாட்டினுடைய பொருப்பாகும்.

பிரிவு – 32
சர்வதேச ஒத்துழைப்பு

1. இவ்வொப்பந்தத்தை ஒவ்வொரு நாடும் நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்கு அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம் என்பதை அனைத்து நாடுகளும் ஒப்புக்கொள்கின்றன. அவை அவ்வாறு ஒருங்கிணைந்து வேலை

செய்வதற்கு (குறிப்பாக ஊனமுற்ற நபர்களின் நிறுவனங்களோடு) தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அதன்மூலமாக:

- ஊனமுற்ற நபர்கள் அனைத்து விஷயங்களிலும் ஈடுபடுத்தப்பட்டு சர்வதேச அளவிலான மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் பயன் பெறுவதை உறுதி செய்ய முடியும்.
- அவர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலமாக மக்களுக்குத் தேவைப்படும் விழிப்புணர்வுக் கல்வியை அனுபவம், தகவல் பகிர்வு, பயிற்சித் திட்டங்கள், சிறந்த நடைமுறை உதாரணம் போன்றவற்றால் உறுதி செய்ய முடியும்.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முறைகளில் ஒத்துழைப்பை உருவாக்குதல்.
- தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார உதவிகளை வழங்குதல். உதாரணமாக புதிய தொழில்நுட்பத்தை பகிர்ந்துக் கொள்ளுதல்

2. பிற நாடுகளின் உதவி கிடைக்காததின் காரணத்தால் தாங்கள் இவ்வொப்பந்தத்தை தமது நாட்டில் நடைமுறைப்படுத்த முடியவில்லை என்று எந்த ஒரு நாட்டின் அரசாங்கமும் சொல்வது அனுமதிக்கப்பட மாட்டாது.

பிரிவு – 33
தேசிய அமலாக்கம் மற்றும் கண்காணிப்பு

1. இவ்வொப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் அரசாங்கம் ஒரு நபரையாவது பொருப்பாளராக நியமிக்கும் என்பதை நாடுகள் உறுதி செய்யும்.
2. இந்த ஒப்பந்தம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை கண்காணிப்பதற்கு அரசாங்கத்தில் ஒரு தனிப்பட்ட அமைப்பை உருவாக்குவதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.
3. நாடுகள் இவ்வொப்பந்தத்தை எவ்வாறு செயல்படுத்துகின்றன என்பதை மேற்பார்வையிடுவதில் அரசு சாரா நிறுவனங்கள் குறிப்பாக, ஊனமுற்ற நபர்கள் மற்றும் அவர்களுடைய அமைப்புகள் முழுமையாக ஈடுபடுத்தப்பட வேண்டும்.

பிரிவு – 34
ஊனமுற்ற நபர்களின் உரிமைக்கான குழு

1. ஊனமுற்ற நபர்களின் உரிமைக்கான குழு ஒன்று உருவாக்கப்படும்.
2. இவ்வொப்பந்தம் சட்டமாகும் பொழுது இக்குழுவில் 12 நிபுணர்கள் இடம் பெறுவார்கள். இவ்வொப்பந்தத்தை மேலும் 60 நாடுகள் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் இக்குழுவில் மேலும் 6 உறுப்பினர்கள் (அதிகபட்சம் 18 உறுப்பினர்கள்) சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
3. இக்குழுவின் உறுப்பினர்கள் தனிப்பட்ட நபர் என்ற அந்தஸ்த்தில் செயல்படுவார்கள். அவர்கள் நிபுணர்களாகவோ அல்லது ஊனம் சம்மந்தப்பட்ட அனுபவம் உடையவர்களாகவோ இருப்பர். அவர்கள் உயர்ந்தபட்ச அறநெறிகளை பின்பற்றுபவர்களாக இருப்பர்.

4. இக்குழுவின் உறுப்பினர்களை உறுப்பு நாடுகள் தேர்ந்தெடுக்கும். அவ்வாறு தேர்ந்தெடுக்கும் பொழுது அவ்வுறுப்பினர்கள் உலகின் பல்வேறு பகுதிகளை சேர்நதவர்களாக இருப்பதை உறுதி செய்வர். மேலும் அக்குழுவில் ஆண்கள், பெண்கள் மற்றும் ஊனமுற்ற நபர்கள் இருப்பதையும் பல்வேறு சட்ட பின்னனிகளை சார்ந்தவர்களாக இருப்பதையும் உறுதி செய்வர்.
5. நாடுகள் ஒரு மாநாட்டிற்காக கூடும் தருணத்தில் இக்குழு உறுப்பினர்களை ரகசிய முறையில் தேர்ந்தெடுப்பார்கள். ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அதிகபட்ச வாக்குகளை பெற வேண்டும். மேலும் அக்கூட்டத்தில் கலந்துக் கொள்ளும் நபர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் அவருக்கு வாக்களிக்க வேண்டும்.
6. முதல் தேர்தல் இவ்வொப்பந்தம் சட்டமாக உருவாகிய 6 மாத காலத்திற்குள் நடைபெறும். பின்னர் வரும் தேர்தல்களுக்கு 4 மாதம் முன்பாக ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் சம்மந்தப்பட்ட நாடுகளுக்கு குழுவில் தேர்ந்தெடுப்பதற்கான தங்களுடைய நியமனங்களை அனுப்புவது சம்மந்தமாக கடிதம் அனுப்புவார். இது சம்மந்தமான முடிவை நாடுகள் 2 மாதத்திற்குள் மேற்கொள்ள வேண்டும்.
7. குழுவின் உறுப்பினர்கள் 4 வருடக் காலம் பதவி வகிக்கலாம். அவர்கள் ஒரே ஒருமுறை மறுத் தேர்வு செய்யப்படலாம். முதலாவது தேர்தலுக்குப் பிறகு 6 உறுப்பினர்கள் 2 வருட காலமே பதவி வகிக்க முடியும்.
8. குழுவில் கூடுதலாக 6 உறுப்பினர்களை சேர்க்கும் காலகட்டம் வரும்பொழுது அவர்கள் வழக்கமாக வரும் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
9. குழுவில் உள்ள ஒரு உறுப்பினர் இறந்து விட்டாலோ அல்லது பதவி விலகி விட்டாலோ, அவ்வுறுப்பினரை நியமித்த நாடு அவருக்கு பதிலாக வேறு ஒரு நிபுணரை எஞ்சிய பதவிக் காலத்திற்கு நியமிக்கலாம்.
10. இக்குழு தான் எப்படி செயல்படும் என்பதறகான விதிகளை தாமே உருவாக்கிக் கொள்ளும்.
11. இக்குழு திறம்பட செயல்படுவதை உறுதி செய்வதற்கு தேவையான அலுவலகம் மற்றும் பணியாளர்களை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் வழங்குவார்.
12. இக்குழுவில் பணியாற்றும் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய சேவைக்காக ஊதியம் வழங்கப்படும். இதனை எவ்வளவு என்பதை ஐக்கிய பொது சபை முடிவு செய்யும்.
13. ஐக்கிய நாடுகளின் சபையில் உள்ள பிற உறுப்பினர்களுக்கு உள்ள உரிமைகள் இக்குழு உறுப்பினர்களுக்கும் உண்டு.

பிரிவு – 35
உறுப்பு நாடுகளின் அறிக்கைகள்.

1. இவ்வொப்பந்தம் சட்டமானதற்கு பிறகு 2 ஆண்டிற்குள் ஒவ்வொரு நாடும் இக்குழுவிற்கு தங்களுடைய அறிக்கையை அனுப்பும். .இதில்

அவை இவ்வொப்பந்தத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துகின்றன என்பதை தெரிவிக்கும்.

2. அதன்பிறகு ஒவ்வொரு நாடும் குறைந்தபட்சம் 4 ஆண்டிற்கு ஒருமுறையாவது இக்குழுவிற்கு அறிக்கை
3. சமர்ப்பிக்கும். இவ்வறிக்கையில் என்ன இருக்கலாம் என்பதை குழு சொல்லும்.
4. நாடுகள் தங்களுடைய முதல் அறிக்கையை எழுதியப் பிறகு வரும் காலங்களில் சமர்ப்பிக்கும் அறிக்கைகளில் ஏற்கனவே கொடுத்த தகவல்களை மறுபடியும் தர வேண்டிய அவசியம் இல்லை. மேலும் நாடுகள் தங்களுடைய அறிக்கைகளை தயாரிக்கும் பொழுது வெளிப்படையாகவும், ஊனமுற்ற நபர்கள் மற்றும் அவர்களது நிறுவனங்களை கலந்து ஆலோசிப்பதையும் பரிந்துரைக்கப்படுகிறார்கள்.
5. நாடுகள் இவ்வொப்பந்தத்தை செயல்படுத்துவதில் எதிர்கொண்ட சவால்களைப் பற்றியும் தங்களுடைய அறிக்கையில் தெரிவிக்கலாம்.

பிரிவு – 36
அறிக்கைகளை பரிசீலித்தல்

1. குழு அறிக்கையை பெறும் பொழுது பின்வரும் செயல்களை மேற்கொள்ளும்:
    - பரிசீலனை, கருத்து மற்றும் பரிந்துரை
    - அறிக்கைளை அளித்த உறுப்பு நாட்டிற்கு தங்களுடைய கருத்துகளையும் பரிந்துரைகளையும் வழங்கும்.
    - உறுப்பு நாடுகள் அதுசம்மந்தமாக மேலும் தகவல்களை குழுவிற்கு அளிக்கலாம்.
    - தேவைப்படும் பட்சத்தில் குழு மேலும் விவரங்களை கேட்கலாம்.
2. உறுப்பு நாடுகள் அறிக்கை சமர்ப்பிப்பதில் தாமதம் காட்டினால், குழு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
    - தாமதம் என்ற விவரத்தை தெரிவிக்கலாம்.
    - 3 மாத காலத்திற்குப் பிறகும் உறுப்பு நாடு அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை என்றால், குழு அந்நாட்டிற்கு பயணம் செய்து இவ்வொப்பந்தத்தை எவ்வாறு செயல்படுத்துகிறது என்பதை தெரிந்துக் கொள்ள அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதை தெரியப்படுத்தலாம்.
3. ஒவ்வொரு நாட்டினுடைய அறிக்கையையும் அனைத்து உறுப்பு நாடுகளும் ஐக்கிய நாடுகளின் தலைமை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
4. உறுப்பு நாடுகள் தங்களுடைய அறிக்கைகளை தம்முடைய நாட்டில் வெளிப்படையாக பகிர்ந்துக் கொண்டு அதைப்பற்றிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற அனுமதிக்க வேண்டும்.
5. தேவைப்பட்டால் குழுவானது இவ்வறிக்கையை தொழில்நுட்ப பிரச்சினைகளில் சம்மந்தப்பட்ட நாட்டிற்கு உதவும் வகையில் ஐக்கிய நாடுகளின் பிற அமைப்புகளுக்கு அனுப்பி வைக்கும்.

பிரிவு – 37

உறுப்பு நாடுகள் மற்றும் குழுவின் இடையிலான ஒத்துழைப்பு

1. குழு தன்னுடைய பணியை செய்யும் வகையில் உறுப்பு நாடுகள் குழுவுடன் ஒருங்கிணைந்து செயல்படும்.
2. உறுப்பு நாடுகளுடன் இணைந்து செயல்படும் பொழுது ஒப்பந்தத்தை சிறந்த முறையில் செயல்படுத்த தேவைப்படும் வசதிகளை உறுதி செய்வதற்கான வழிமுறைகளை குழுவானது மேற்கொள்ளும்.

பிரிவு – 38

பிற அமைப்புகளுடனான குழுவின் உறவுமுறை

ஒப்பந்தம் சிறந்த முறையில் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும், உறுப்பு நாடுகள் இணைந்து செயல்படுவதை ஊக்குவிப்பதற்கும்.:

அ. குழு சம்மந்தப்பட்ட அமைப்புகள் வேலை செய்யும் விஷயத்தைப் பற்றி விவாதிக்கும் பொழுது, அக்கூட்டத்திற்கு சம்மந்தப்பட்ட அமைப்புகளை அழைக்கலாம்.

குழுவானது சம்மந்தப்பட்ட அமைப்புகளின் அறிவுப் பகிர்வு தேவைப்படும் சூழ்நிலையில் அக்கூட்டங்களுக்கு இவ்வமைப்புகளை அழைக்கலாம்.

மேலும் குழு உறுப்பு நாடுகள் எவ்வாறு இவ்வொப்பந்தத்தை நடைமுறைப்படுத்துகின்றன என்பது பற்றிய தனிப்பட்ட அறிக்கைகளை இவ்வமைப்புகளிடமிருந்தும் கேட்கலாம்.

ஆ. மனித உரிமைகள் சம்மந்தப்பட்ட பிற ஒப்பந்தங்களை உறுப்பு நாடுகள் எவ்வாறு நடைமுறைப் படுத்துகின்றன என்பதை கவனிப்பதற்கு 7 பிற குழுக்கள் உள்ளன. உதாரணமாக, பெண்கள் மற்றும் குழந்தைகள் சம்மந்தப்பட்ட ஒப்பந்தங்கள் போன்றவை. மேலும் பிற குழுக்கள் இக்குழுவினுடைய பணியையே தாங்களும் மேற்கொள்ளாமல் இருப்பதையும், உறுப்பு நாடுகளுக்கு நிலையான அறிவுரைகளை வழங்குவதையும் உறுதி செய்வதற்கான பேச்சு வார்த்தைகளை இக்குழு மேற்கொள்ளும்.

பிரிவு – 39
குழுவின் அறிக்கை

குழுவானது ஐக்கிய நாடுகளின் பொது சபைக்கும் பொருளாதாரம் மற்றும் சமூக சபைக்கும் 2 ஆண்டிற்கொருமுறை அறிக்கையை சமர்ப்பிக்கும். தாங்கள் உறுப்பு நாடுகளிடமிருந்து பெற்ற அறிக்கைகளின் அடிப்படையில் ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் வழங்கும்.

பிரிவு – 40
உறுப்பு நாடுகளின் மாநாடு

1. உறுப்பு நாடுகள் இவ்வொப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளை விவாதிப்பதற்காக குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒன்று கூடும்.
2. ஐக்கிய நாடுகளின் பொது செயலாளர் இவ்வொப்பந்தம் சட்டமாகிய 6 மாதத்திற்குள் இதன் முதலாவது கூட்டத்தை ஏற்பாடு செய்வார். அதன்பிறகு 2 ஆண்டிற்கொருமுறையோ அல்லது உறுப்பு நாடுகள் மேற்கொள்ளும் முடிவின் அடிப்படையிலேயோ இக்கூட்டங்கள் நடைபெறும்.

பிரிவு – 41
வைப்பு

இவ்வொப்பந்தமானது ஐக்கிய நாடுகளின் பொது செயலாளரிடம் தாக்கல் செய்யப்படும்.

பிரிவு – 42
கையொப்பம்

உறுப்பு நாடுகள் கையெழுத்திடுவதற்கு இவ்வொப்பந்தம் நியூயார்க் நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொது கட்டிடத்தில் மார்ச் 30, 2007 முதல் திறந்திருக்கும்.

பிரிவு – 43
ஒப்புதலைப் பின்பற்றுதல்

ஒப்பந்தத்தில் உடனடியாகவே கையொப்பமிட்ட நாடுகள் அவற்றை ஏற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதாவது இவ்வுறுப்பு நாடுகளின் தேசிய அரசாங்கம் இவ்வொப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கான பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு உடனடியாக ஒப்பந்தத்தில் கையொப்பமிடாத நாடுகள் அதற்கு சம்மதம் என்று கூறுவதாக அர்த்தம். அதாவது இவ்வொப்பந்தத்தில் பிற்காலத்தில் இணைந்து கொள்வதாக பொருள்.

பிரிவு – 44
மண்டல ஒருங்கிணைப்பு அமைப்பு

1. மண்டல ஒருங்கிணைப்பு அமைப்பு என்பது, உலகின் ஒரு பகுதியிலுள்ள உறுப்பு நாடுகள் அனைத்தும்

சேர்ந்து இவ்வொப்பந்தத்தில் அடங்கியுள்ள விஷயங்களை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை வழங்கியுள்ள ஒரு அமைப்பாகும்

2. ஒப்பந்தத்தில் எங்கெல்லாம் நாடுகள் என்று குறிப்பிடுகின்றதோ அது இவ்வமைப்புகளுக்கும் பொருந்தும்.
3. எத்தனை நாடுகள் இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிட்டிருகின்றன என்பதை கணக்கிடும் பொழுது அதில் இவ்வமைப்புகளின் எண்ணிக்கை சேர்க்கப்பட மாட்டாது.
4. இவ்வமைப்புகள் கூட்டங்களில் மேற்கொள்ளப்படும் வாக்கெடுப்புகளில் கலந்துக் கொள்ளலாம். இவ்வமைப்புகளுக்கு எத்தனை உறுப்பு நாடுகள் உள்ளனவொ அத்தனை வாக்குகளை செலுத்தலாம். ஆனால் இவ்வமைப்பிலுள்ள ஏதேனும் ஒரு உறுப்பு நாடு தாமாகவே வாக்களிக்க விரும்பும் பட்சத்தல் இவ்வமைப்பு வாக்கெடுப்பில் கலந்துக் கொள்ள இயலாது.

பிரிவு – 45
செயல்பாட்டிற்கு வருதல்

1. 20 உறுப்பு நாடுகள் இவ்வொப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட 30வது நாளிலிருந்து இவ்வொப்பந்தம் சட்டமாகும்.
2. அதன் பிறகு ஒப்பந்தத்தை உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் அவர்கள் ஏற்றுக் கொண்ட 30 நாட்களுக்குப் பிறகு அது அவர்களுக்கு சட்டமாகும்.

பிரிவு – 46
விருப்பு வெறுப்புகள்

1. உறுப்பு நாடுகள் இவ்வொப்பந்தத்தைப் பற்றிய விருப்பு வெறுப்புகளை தெரிவிக்கலாம். உதாரணமாக, இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிடும் பொழுது ஒரு சில குறிப்பிட்ட கடமைகளை செயல்படுத்த முடியாது என்று கூறலாம். ஆனால் இவை இவ்வொப்பந்தத்தில் லட்சியத்திற்கும் விருப்பத்திற்கும் எதிராக இருக்க கூடாது.
2. இத்தகைய விருப்பு வெறுப்புகளை எப்பொழுது வேண்டுமானாலும் விலக்கிக் கொள்ளலாம்.

பிரிவு – 47
திருத்தங்கள்

1. எந்த ஒரு உறுப்பு நாடும் இவ்வொப்பந்தத்தில் மாற்றங்களை கொண்டு வருவதற்கான விருப்பத்தை ஐக்கிய நாடுகளின் பொது செயலாளரிடம்

தெரிவிக்கலாம். பொது செயலாளர் இவ் உத்தேச மாற்றங்களை பிற உறுப்பு நாடுகளுக்கு அனுப்பி வைப்பார்.

4 மாத காலத்திற்குள் 3-ல் ஒரு பங்கு உறுப்பு நாடுகள் இத்தகைய மாற்றங்களை ஏற்றுக் கொள்வதற்கு கூட விரும்பினால் அக் கூட்டத்தை பொது செயலாளர் ஏற்பாடு செய்யலாம்.

இத்தகைய மாற்றத்திற்கு கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள 3-ல் 2 பங்கு உறுப்பு நாடுகள் வாக்களித்தால் இம்மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். பிறகு இதனை பொது செயலாளர் ஐக்கிய நாடுகளின் பொது சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிப்பார்.

2. பொது சபை இம்மாற்றங்களுக்கு ஒப்புதல் அளித்தப் பிறகு 3-ல் 2 பங்கு நாடுகள் இதனை ஏற்றுக் கொண்ட 30 நாட்களுக்குப் பிறகு சட்டமாகும்.

   இதன் பிறகு இம்மாற்றத்தை ஏற்றுக் கொள்ளும் நாடுகளில் இது 30 நாட்களுக்குப் பிறகு சட்டமாகும்.

   எந்த உறுப்பு நாடுகள் இம்மாற்றத்தை ஏற்றுக் கொள்கின்றனவோ அந்த நாடுகளில் மட்டுமே இது சட்டமாகும்

3. உத்தேசிக்கப்பட்ட மாற்றங்கள் குழுக்களைப் பற்றியோ அல்லது அறிக்கைகளைப் பற்றியோ இருக்கும் பட்சத்தில், 3-ல் 2 பங்கு உறுப்பு நாடுகள் ஒப்புதல் அளித்த 30 நாட்களுக்குப் பிறகு, மாற்றத்திற்கு ஒப்புதல் அளித்த நாடுகளில் மட்டுமல்லாமல் அனைத்து நாடுகளிலும் சட்டமாகும்.

பிரிவு – 48
கண்டனம்

உறுப்பு நாடுகள் பிற்காலத்தில் இவ்வொப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்று கூறலாம். இதற்காக அவ்வுறுப்பு நாடுகள் எழுத்து மூலமாக பொது செயலாளருக்கு தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவித்த ஒரு ஆண்டிற்குப் பிறகு இது அமலுக்கு வரும்.

பிரிவு – 49
அனைவரும் பயன்படுத்தும் வடிவங்கள்

அனைத்து மக்களும் படித்து புரிந்து கொள்ளும் வகையில் இவ்வொப்பந்தமானது புள்ளியெழுத்து போன்ற பிற வடிவங்களிலும் தயாரித்து அளிக்கப்பட வேண்டும்.

பிரிவு – 50
சட்டப்பூர்வமான ஆவணம்.

இவ்வாவனத்தின் உண்மைப் பிரதி அரபு, சீன, ஆங்கிலம், பிரெஞ்ச், ரஷ்ய மற்றும் ஸ்பானிய மொழிகளில் இருக்கும்.

ஊனமுற்ற நபர்களின் உரிமைக்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தின் விருப்ப விதிமுறைகள்.

(ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் சமயத்தில் ஏற்கப்பட வேண்டியது)

இந்த விதிமுறைகளை ஒப்புக் கொள்ளும் அனைத்து நாடுகளும் பின்வருவனவற்றை ஏற்றுக் கொள்கின்றன:

பிரிவு – 1

1. இவ்வொப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள உரிமைகள் மீறப்படுவது பற்றிய தனிநபர் அல்லது நிறுவனங்களின் புகார்களை குழு பெற்று அவற்றை பரிசீலிக்க அதிகாரம் வழங்குதல்
2. குழு எந்தெந்த நாடுகள் இவ்விதிமுறைகளை ஏற்றுக்கொண்டுள்ளனவோ அந்நாடுகளிலிருந்து வரும் புகார்களை மட்டுமே பரிசீலிக்கும்.

பிரிவு – 2

குழு பின்வரும் சூழ்நிலைகளில் புகார்களை ஏற்றுக் கொள்ளாது.

அ. அனுப்புபவரின் விவரம் இல்லாத பட்சத்தில்.

ஆ. ஒப்பந்தத்திற்கு பொருந்தாத வகையில் இருக்குமாயின்

இ. ஏற்கனவே அத்தகைய ஒரு சூழ்நிலை விசாரிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், அதே சூழ்நிலையை வேறு ஒரு அமைப்பு விசாரித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில்,

ஈ. உள்நாட்டு வாய்ப்புகளை புகார் அளிப்பவர் முழுவதும் பயன்படுத்தாத சூழ்நிலையில். ஆனால், உள்ளூர் வசதிகள் பிரச்சினையை கவணிப்பதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்ற சூழ்நிலையில் அப்புகார் குழுவினால் பரிசிலிக்கப்படும்

உ. புகார் எந்த அடிப்படையோ, ஆதாரமோ இல்லாத சூழ்நிலையில்,

C. விதிமுறை சட்டமாவதற்கு முன்பாக ஏற்பட்ட பிரச்சினை சம்மந்தமான புகாராக இருந்தால்,

பிரிவு – 3

புகார் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், குழுவானது அதனை சம்மந்தப்பட்ட உறுப்பு நாட்டிற்கு ரகசியமாக அனுப்பி வைக்கும். இதற்கான பதிலையும் நாடுகள் அது சம்மந்தமாக காணப்பட்ட தீர்வையும் பற்றி 6 மாத காலத்திற்குள் தெரிவிக்கும்.

பிரிவு – 4

1. பாதிக்கப்பட்டவர்கள் நிரந்தரமான பாதிப்படையும் ஆபத்து உள்ள சூழ்நிலையில், குழு புகார் கிடைத்த உடனேயே தேவையான நடவடிக்கையை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட உறுப்பு நாடைக் கேட்டுக் கொள்ளும்.
2. அவ்வாறு குழு உறுப்பு நாடுகளை உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள செய்வதென்பது இப்பிரச்சினைக்கு கிடைத்த வெற்றி என்று கருத முடியாது.

பிரிவு – 5

புகார்களை பரிசிலிக்கும் பொழுது குழு ரகசியமாக கூடும். புகார்களை பரிசிலித்தப் பிறகு தேவைப்பட்டால் குழு தேவையான ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் சம்மந்தப்பட்ட உறுப்பு நாட்டிற்கும், புகார் அளித்தவருக்கும் வழங்கும்.

பிரிவு – 6

1. ஒப்பந்தத்தில் உள்ள உரிமைகள் பரவலாகவும் கடுமையாகவும் மீறப்பட்டுள்ளன என்ற நம்பத்தக்க தகவலை பெறும் பட்சத்தில், இது சம்மந்தப்பட்ட உறுப்பு நாட்டை அழைத்து தகவல் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்க செய்து அதனுடைய கருத்துக்களை தெரிவிக்க செய்யும்.
2. தகவல்களை நன்கு பரிசிலித்தப் பிறகு குழு உடனடியாக அவ்வி ஷயங்களை விசாரிப்பதற்கு 1 அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும். உறுப்பு நாடுகள் ஒப்புக் கொள்ளும் பட்சத்தில், தேவைப்பட்டால் இவ்விசாரணையை நேரடியாக மேற்கொள்ள அந்நாட்டிற்கு இவ்வுறுப்பினர்கள் செல்லலாம்.
3. விசாரணையின் முடிவுகளையும், பரிந்துரைகளையும் சம்மந்தப்பட்ட உறுப்பு நாட்டிற்கு வழங்கும்.
4. சம்மந்தப்பட்ட உறுப்பு நாடு விசாரணையின் முடிவு சம்மந்தப்பட்ட தங்களுடைய கருத்துக்களை 6 மாத காலத்திற்குள் குழுவிடம் சமர்ப்பிக்கும்.
5. இவ்விசாரனை முழுவதும் ரகசியமாக வைக்கப்படும். மேலும், இந்நடவடிக்கை முழுமைக்கும் தக்க ஒத்துழைப்பு தருமாறு சம்மந்தப்பட்ட உறுப்பு நாடு கேட்டுக் கொள்ளப்படும்.

பிரிவு – 7

1. விசாரனையின் போது எந்த விஷயங்களுக்கு உறுப்பு நாடுகள் பதிலலிக்கவில்லை என்ற விவரத்தையும் தங்களுடைய அறிக்கையில் குறிப்பிட வேண்டும் என்பதை குழு சம்மந்தப்பட்ட உறுப்பு நாட்டிடம் கேட்கலாம்.
2. 6 மாத காலத்திற்குள் பதிலலிக்காத பட்சத்தில் உறுப்பு நாடுகளை விசாரனை முடிவு பற்றிய தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்குமாறு தேவைப்பட்டால் குழு சம்மந்தப்பட்ட உறுப்பு நாட்டைக் கேட்கலாம்.

பிரிவு – 8

பிரிவு 6 மற்றும் 7 –லில் விவாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளில் உறுப்பு நாடுகள் குழுவிற்கு சம்மந்தப்பட்ட அதிகாரத்தை வழங்க வில்லை என்று கூற இவ்விதிமுறைகளை ஏற்றுக்கொண்டுள்ள உறுப்பு நாடுகளுக்கு அனுமதி உண்டு.

பிரிவு – 9

இவ்விதிமுறையானது ஐக்கிய நாடுகளின் பொது செயலாளரிடம் தாக்கல் செய்யப்படும்.

பிரிவு – 10

இவ்விதிமுறைகள் நியுயார்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தல் மார்ச் 30 2007 முதல் கையெழுத்திற்காக திறந்து வைக்கப்படும்.

பிரிவு – 11

இவ்வொப்பந்தத்தை செயல்படுத்த ஒப்புக்கொண்டுள்ள நாடுகள் இவ்விதிமுறைகளிலும் கையொப்பமிட்டு பிறகு தங்களுடைய நாடுகளில் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பிரிவு – 12

1. மண்டல ஒருங்கிணைப்பு அமைப்பு என்பது, இவ்விதிமுறையில் கூறப்பட்டுள்ள விஷயங்களை சமாளிப்பதற்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பல நாடுகளின் ஒரு அமைப்பு.
2. இவ்விதிமுறை எங்கெல்லாம் “நாடுகள் ஏற்றுக்கொள்கின்றன” என்று கூறுகின்றதோ அங்கெல்லாம் அது இவ்வமைப்புகளுக்கும் பொருந்தும்.
3. இவ்விதிமுறைகளை எத்தனை நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன என்பதை கணக்கிடும் பொழுது இவ்வமைப்புகளை கணக்கிலெடுக்க கூடாது.
4. கூட்டங்களில் இவ்வமைப்புகள் வாக்களிக்க முடியும். இவற்றில் எத்தனை உறுப்பு நாடுகள் உள்ளனவோ அத்தனை வாக்குகள் உண்டு. இவ்வமைப்பில் உள்ள ஏதேனும் ஒரு உறுப்பு நாடு தனியாக வாக்களிக்க விரும்பும் பட்சத்தில் இவ்வமைப்பு வாக்களிக்க முடியாது.

பிரிவு – 13

1. ஒப்பந்தம் சட்டமான பிறகு, இவ்விதிமுறைகளை 10 நாடுகள் ஏற்றுக் கொண்டு அல்லது ஏற்றுக் கொள்ள சம்மதித்த 30வது நாளிலிருந்து இவை சட்டமாகும்.
2. இதன் பிறகு இவ்விதிமுறைகளை நாடுகள் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் அவை ஏற்றுக் கொண்ட 30 நாட்களுக்குப் பிறகு சட்டமாகும்.

பிரிவு – 14

இவ்விதிமுறைகளை ஏற்றுக்கொண்ட உறுப்பு நாடுகள் இது சம்மந்தமான விருப்பு வெருப்புகளை தெரிவிக்கலாம். ஆனால் அவை இவ்விதிமுறைகளின் லட்சியத்திற்கும் விருப்பத்திற்கும் எதிராக இருக்க கூடாது.

இத்தகைய விருப்பு வெறுப்புகள் எப்போது வேண்டுமானாலும் விலக்கிக் கொள்ளப்படலாம்.

பிரிவு – 15

1. இவ்விதிமுறைகளை ஏற்றுக்கொண்ட எந்த ஒரு உறுப்பு நாடும் தேவைப்படும் மாற்றங்கள் பற்றிய ஆலோசனையை ஐக்கிய நாடுகளின் தலைமை செயலரிடம் தெரிவிக்கலாம்.

   இதனை தலைமை செயலர் இவ்விதிமுறைகளை ஏற்றுக் கொண்ட பிற உறுப்பு நாடுகளுக்கு அனுப்பி வைப்பார்.

   4 மாத காலத்திற்குள் இவ்விதிமுறைகளை ஏற்றுக் கொண்ட உறுப்பு நாடுகளில் 3-ல் 1 பங்கு உறுப்பினர்கள் இம்மாற்றத்தை ஏற்றுக் கொள்வது சம்மந்தமாக கூட விரும்பினால் அதற்கான ஏற்பாடுகளை பொது செயலாளர் மேற்கொள்வார். அத்தகைய கலந்து கொண்டுள்ள உறுப்பினர்களில் 3-ல் 2 பங்கு உறுப்பினர்கள் ஆதரித்தால் இம்மாற்றங்களை மேற்கொள்ள முடியும்.

   பிறகு இதனை பொது செயலாளர் ஐ.நா பொது சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிப்பார்.

2. இவற்றை ஐக்கிய நாடுகளின் பொது சபை ஏற்றுக் கொண்ட பிறகு இவ்விதிகளை ஏற்றுக் கொண்ட உறுப்பு நாடுகளில் 3-ல் 2 பகுதியினர் இம்மாற்றங்களை ஏற்றுக் கொண்ட 30 நாட்களுக்குப் பிறகு அவை சட்டமாகும். இதன் பிறகு இம்மாற்றங்களை நாடுகள் ஏற்றுக் கொள்ளும் பொழுது அவை ஏற்றுக் கொண்ட 30 நாட்களுக்குப் பிறகு சட்டமாகும். இம்மாற்றங்கள் எந்த நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளனவோ அங்கு மட்டுமே சட்டமாகும்.

பிரிவு – 16

ஒரு உறுப்பு நாடு பிற்காலத்தில் இவ்விதிமுறைகளை ஏற்றுக் கொள்வதில்லை என்று கூற முடியும். அதற்கு அவை அதனை எழுத்து மூலமாக பொது செயலாளரிடம் வழங்க வேண்டும். இது அவ்வாறு வழங்கப்பட்ட ஒரு வருடத்திற்கு பிறகு அமலுக்கு வரும்.

பிரிவு – 17

அனைத்து மக்களும் படித்து புரிந்து கொள்ளும் வகையில் இவ்விதிமுறைகள் அடங்கிய ஆவணம் புள்ளியெழுத்து போன்ற பல வடிவங்களிலும் தயாரிக்கப்படும்.

பிரிவு – 18

இவ்விதிமுறை ஆவணத்தின் உண்மைப் பிரதிகள் அரபு,சீன,ஆங்கில,பிரெஞ்ச்,ரஷ்ய மற்றும் ஸ்பானிய மொழிகளிலும் இருக்கும்.